வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 04.03.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 89 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# விமல், கம்மன்பிலவின் அமைச்சு பதவிகள் 'அவுட்'



## ஜனாதிபதி கோட்டாபய நேற்று அதிரடி

கொழும்பு, மார்ச் 04

அமைச்சர்களான உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோரை அமைச்சுப் பதவிகளிலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீக்கியுள்ளார்.

அமைச்சர்களான கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் கடந்த காலங்களில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்து வந்த நிலையிலேயே, தற்போது அவர்கள் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்

15

## புதவி நீக்கிய ஜனாதிபதிக்கு பதில் வழங்கினார் வீரவன்ஸ!

கொழும்பு, மார்ச் 04

கைத்தொழில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

15

# அனைத்து மக்களும் ஏற்கக்கூடிய அரசமைப்பை உருவாக்குங்கள்!

## அமைச்சர் பீரிஸ் தலைமையிலான குழுவிடம் ஐ.நா. மனித உரிமை ஆணையர் வலியுறுத்தல்

ஜெனிவா, மார்ச் 04

**அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பொன்றை உருவாக்கினால், இலங்கையில் பிரச்னைகளுக்கு தீர்வு காணமுடியும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைத் தூதுக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.**

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட இலங்கைத் தூதுக் குழுவினர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையார் நேற்று முன் தினம் சந்தித்து பேசினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு

15



## இன்றும் ஏழரை மணி நேர மின்வெட்டு

கொழும்பு, மார்ச் 04

நாடளாவிய ரீதியில் இன்று வெள்ளிக்கிழமையும் ஏழரை மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இன்று காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் 5 மணி நேரம் மின்வெட்டு அமுல் படுத்தப்படவுள்ளது.

அத்துடன், மாலை 6 மணிமுதல் இரவு 11 மணி வரையான காலப்பகுதியினுள் இரண்டரை மணி நேரமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது. (அ)

# இலங்கையிலிருந்து ஐ.நா. பெற்றுள்ள புள்ளிவிவரங்கள் பக்கச்சார்பானவை!

## மீள்பரிசீலனை செய்யக் கோருகிறார் அமைச்சர் பீரிஸ்

ஜெனிவா, மார்ச் 04

ஐ.நா. சபையின் சார்பில் தீர்மானங்கள், அவதானிப்புகளை மேற்கொள்வதற்காக இலங்கையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்கள் தவறானவை- பக்கச்சார்பானவையாக இருக்கலாம் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையாரை சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

15

# தமிழருக்கு தீர்வு வழங்கும் பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கும் உண்டு!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 04

தமிழ் மக்கள் தமது பூர்வீகமான வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஒன்றிணைந்த - பிரிவுபடாத இலங்கையில், அர்த்தமுள்ள அதிகார பிரயோகத்துடன் தொடர்ந்தும் வாழ விரும்புகிறார்கள். இது உறுதி செய்யப்படவேண்டியது அடிப்படையாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தி

15





## மின் தடைக்கு எதிராக நேற்றிரவு யாழ்.செம்மணியில் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 04

மின்சாரத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து மெழுகுவர்த்தி மற்றும் ரோர்ச் லைட் ஏந்திய போராட்டமொன்று நேற்று வியாழக்கிழமை இரவு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

15

## விமலின் கதிரையில் எஸ்.பி.



கொழும்பு, மார்ச் 04

ஜனாதிபதியின் அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அமைவாக புதிய கைத்தொழில் அமைச்சராக எஸ்.பி.திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

15



## எரிசக்தி அமைச்சராக காமினி மின்சக்தி அமைச்சராக பவித்ரா

கொழும்பு, மார்ச் 04

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால், தற்போதுள்ள அமைச்சரவை அமைச்சுப் பதவிகளில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அமைச்சர் காமினி லொக்குகே இந்த விடயத்தை உறுதிப்படுத்தினார்.

எரிசக்தி அமைச்சராக காமினி

15

## இப்படியும் நடக்கிறது...!

இந்தியப் பிரதமர் யாழ்ப்பாணம் வந்துபோன பின்னர் அப்போது நமது முதல்வராக இருந்த நீதியரசர் அவருக்கு எழுதிய கடிதம் பலருக்கும் ஞாபகமிருக்கலாம்.

விக்கினேஸ்வரன் தனது ஆன்மீக குரு பிரேமானந்தாஜியின் ஆச்சிரமத்தில் அவரோடு கைதுசெய்யப்பட்டு குற்றவாளிகளாக இந்திய உச்சநீதிமன்றத்தால் தண்டனை பெற்ற இருவரை விடுவிக்குமாறு அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

குற்றவாளிகளாக தமிழக நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்ட பின்னர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டு அதிலும் தண்டனை உறுதி செய்யப்பட்ட இருவரை “அப்பாவிகளான” அவர்களை விடுதலை செய்ய நமது முதல்வர் இந்தியப் பிரதமரிம் அப்போது கோரிக்கை வைத்திருந்தார்.

ஒரு உயர்நீதிமன்ற நீதியரசராக இருநந்தவர். பல்வேறு வழக்குகளில் பலருக்கும் ஆயுள்தண்டனை வழங்கியவர். இன்றும் தனது பெயருக்கு முன்னால் நீதியரசர் என்று “அரசாட்சி” செய்கின்ற ஒருவர், இந்திய உச்சநீதிமன்று தண்டனை வழங்கிய ஒருவரை அப்பாவிகள் என்று வர்ணித்ததைப் பார்த்து பலரும் ஆச்சரியப்பட்டிருப்பார்கள்.

அவ்வாறு அவர் கூறியதன் மூலம் அவர் சொல்ல வந்தது, நமது நீதிமன்றங்களிலும் அப்பாவிகளுக்கும் தண்டனை வழங்குகிறோம் தானே, அதுபோலவே இந்திய நீதிமன்றங்களும் நீதிவழங்குகின்றன என்று நினைத்தாரோ என்றே அப்போது எண்ணத் தோன்றியது.

இது நமது நீதிமன்றங்களுக்கு அதன் ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் வழங்கிய சான்றிதழாக நாம் எடுத்திருக்கலாம்.

இப்போது இவை எல்லலாம் எதற்கு என்று நீங்கள் கருதலாம்.

நமது நீதிமன்றங்கள் மீது நமக்கு நம்பிக்கை இல்லாததாலேயே இறுதி யுத்த காலத்தில் நடந்த குற்றங்களுக்கு சர்வதேச விசாரணையை கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கும் மேலாக வலியுறுத்தி வருகின்றோம்.

ஆனால் தமது நீதித்துறை சுயாதீனமானது, எந்தவொரு விசாரணையையும் நடாத்தக்கூடிய தகுதியுடையது என்றே சிறிலங்கா அரச தரப்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அது ராஜபக்ஷ அரசாங்கமாக இருந்தாலும் சரி, ரணில் அரசாங்காக இருந்தாலும் சரி எல்லோருமே ஒரே கொள்கையையே கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்த நிலையில்தான், எமது நீதித்துறை மீது நம்பிக்கை இல்லாமல் முன்னாள் ஆளும் கட்சியையும், எதிர்காலத்தில் ஆளும்கட்சியாக விரும்புகின்ற கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு அரசியல்வாதிகள் இப்போது ஜெனிவாவின் வாசல்கதவைத் தட்டத் தொடங்கியிருக்கின்றனர்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்காவிற்காக நீதிவேண்டியே ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் இருவர் ஜெனிவா சென்றிருக்கின்றனர்.

சிறிலங்காவின் நீதித்துறை அரசியல்மயப்படுத்தப்பட்டது, அவர்கள் பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நீதிவழங்குவார்கள் என்று எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று ஜெனிவாவில் போராடிவரும் தமிழர் தரப்பிற்கு, குறிப்பாக புலம்பெயர் தரப்பிற்கு இவர்களின் ஜெனீவா விஜயம் இப்போது உதவியிருக்கின்றது.

“பார்த்தீர்களா? இதைத்தான் நாங்கள் கடந்த பன்னிரண்டு வருடங்களாக சொல்லிக்ொகண்டிருக்கின்றோம். இப்போது அந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் ஐந்து ஆண்டுகள் ஆட்சியிலிருந்தவர்களே இங்கு வந்து சிறிலங்கா நீதித்துறையை அவமதித்த குற்றச்சாட்டில் தண்டனை பெற்ற ஒருவருக்காக நீதிகேட்டு வந்திருக்கின்றார்கள். இனியாவது எங்கள் கோரிக்கையின் நியாயத்தைப் புரிந்துகொள்ளுங்கள்“ என்று கேட்பதற்கு உதவியிருக்கிறார்கள்.

**- ஊர்க்குருவி**

# காட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்ட 60000 மாத்திரைகள் மன்னாரில் மீட்பு

*மன்னார், மார்ச் 04*

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மாத்திரைகளை இராணுவத்தினர் நேற்று அதிகாலை மீட்டனர்.

மன்னார் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், நடுக்குடா இராணுவத்தினரின் உதவியுடன் நேற்று அதிகாலை நடுக்குடா காட்டுப் பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு பெட்டிகள் கண்டு பிடிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது ஒரு தொகுதி மாத்திரைகள் மீட் கப்பட்டன.

சோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்ட மாத்திரைகள் உடல் வலியை குறைப்பதற்கு பயன்படுத்தப்படுபவை என தெரியவந்துள்ளதோடு, சோதனை செய்த இரு

பெட்டிகளில் இருந்து 60000 மாத்திரைகள் மீட்கப்பட்டன.

குறித்த மாத்திரைகள் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது டன், சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என இராணுவத்தினர் தெரிவித் தனர்.

மீட்கப்பட்ட மாத்திரைகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

## ஆலய உண்டியலை உடைத்த இருவர் ஆரியகுளத்தில் கைது

*யாழ்ப்பாணம், மார்ச் 04*

யாழ்ப்பாணம் ஆரியகுளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் உண்டியல் உடைத்து திருடிய நாவற்குழிப் பகுதியை சேர்ந்த இருவர் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஆரியகுளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் உள்ள உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் திருடப்பட்ட நிலையில் ஆலய நிர்வாகத்தினரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் குறித்த உண்டியலை உடைத்தோர் நாவற்குழிப் பகுதியில் கைது செய்யப்பட்டனர். (அ)

# தோல்வியடைந்துள்ளது ‘வியத் மக’ அமைப்பு!

## சுட்டிக்காட்டுகிறார் டிலான்

*கொழும்பு, மார்ச் 04*

“வியத் மக“ அமைப்பு அரசியல் ரீதியாக தோல்வியடைந்துள்ளது என்பதால், அது பற்றி பேசுவதில் பயனில்லை எனவும் நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வுகாண டியூ குணசேகர போன்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளில் உள்ள புத்திஜீவிகள் அடங்கிய குழுவை நியமிக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வியத் மக தோல்வியடைந்துள்ளது. அது பற்றி பேசுவதில் பயனில்லை. நாட்டில் உள்ள புத்திஜீவிகளை பயன்படுத்தி பயனை பெறவேண்டும்.

அமைச்சர் உதய கம்மன்பிலவும் தோல்வியடைந்துவிட்டார். எரிசக்தி அமைச்சர் என்ற வகையில் உதய கம்மன்பில ஊடகங்களுக்கு செவ்வி கொடுப்பதை நிறுத்திவிட்டு, அமைச்சர் என்ற வகையில் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.

மக்கள் படும் கஷ்டத்தை நானும் அனுபவித்து வருகின்றேன். இதனால், அந்த கஷ்டம் குறித்த சிறந்த அனுபவம் உள்ளது. ஊடகங்களிடம் பேசுவதை நிறுத்திவிட்டு ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியில் இருக்கும் தீர்வுகளை வழங்கக் கூடியவர்களை இணைந்து நாடு எதிர்நோக்கி வரும் பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டும்- என்றார். (அ)

## தற்கால இளைஞர்களிடம் காது கேளாமை அதிகரிப்பு

*கொழும்பு, மார்ச் 04*

அண்மைக்காலமாக இளைஞர்களிடையே காது கேளாமை அதிகரித்துள்ளது.

தொண்டை, காது, மூக்கு தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் யசத் வீரக்கொடி இதனை தெரிவித்தார்.

செவித்திறன் கருவிகளின் பாவனை அதிகரித்துள்ளமையே இந்நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகளில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# ஆறு வயது மகளுக்கு சூடு வைத்த தாய் கைது!

## கொழும்பில் சம்பவம்

*கொழும்பு, மார்ச் 04*

தனது ஆறு வயது குழந்தையை கரண்டியை கொண்டு சூடு வைத்த பெண் ஒருவரை கிருலப்பனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அயல் வீட்டில் உள்ள பெண் ஒருவர் குழந்தையின் நடத்தையால் அதிருப்தி அடைந்து செய்த முறைப்பாட்டை அடுத்து குழந்தை மீது கோபம் கொண்ட தாய் , கரண்டியை கொண்டு குழந்தையின் உடலில் சூடு வைத்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் குழந்தையின் தந்தை கிருலப்பனை பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.

இதனிடையே, குழந்தை தீக்காயங்களுடன் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# எரிபொருள் நெருக்கடி காரணமாக பணிக்கு செல்லாத அரச ஊழியர்கள்

*கொழும்பு, மார்ச் 04*

எரிபொருள் நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள போக்குவரத்து பிரச்சினையால் சுமார் 10 வீதமான அரச ஊழியர்கள் நேற்று முன்தினம் கடமைக்கு சமூகமளிக்கவில்லை என அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முழுமையான அரச ஊழியர்களில் 15 லட்சம் பேரில் ஒன்றரை லட்சம் பேர் பணிக்கு வரவில்லை என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் ரயில் சேவைகள் வழமை போன்று இயங்குகின்றன. ஆனால் 18,000 தனியார் பஸ்களில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே நேற்று முன்தினம் இயக்கப்பட்டது.

அலுவலகப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் பஸ்களும் எரிபொருள் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதால், அரச உத்தியோகத்தர்கள் கடமைக்குச் செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக வாரத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் பணிக்கு அரச ஊழியர்களை மீள அழைப்பது தொடர்பில் கடந்த 21ஆம் திகதி தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையில் கலந்துரையாடப்பட்டபோதிலும் இதுவரை இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

ஈழநாடு
Eelanadu
04.03.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜெனிவாவில் பேராயர்?

இலங்கையின் பேராயர் மல்கம் ரஞ்சித் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரை சந்தித்து ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முறையிட்டிருக்கின்றார். இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பிலான பொறுப்பு கூறல் விடயம் தொடர்பில் மல்கம் ரஞ்சித் ஒருபோதும் குரல் கொடுத்ததில்லை. தனக்கு தொடர்பில்லாத ஒரு விடயம் போன்றே அவர் நடந்து கொண்டார். வடக்கு, கிழக்கை சேர்ந்த ஆயர்கள் தமிழ் மக்களின் மனித உரிமைகள் தொடர்பில் குரல்கொடுத்து வந்த போதும், பேராயர் என்னும் வகையில் மல்கம் ரஞ்சித் தனது பகிரங்க ஆதரவை ஒரு போதும் வழங்கியதில்லை. இந்த நிலையில், அவர் தற்போது, கத்தோலிக்க மக்களுக்கு இடம்பெற்றிருக்கும் அநீதி தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையை நாடியிருக்கின்றார்.

இலங்கையின் அதியுயர், கத்தோலிக்க மதத் தலைவர் ஒருவர், இலங்கையின் நீதித்துறையின் மீது நம்பிக்கையின்றி, ஐ.நாவை நாடியிருக்கின்றார். ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்னும் கோரிக்கையை அவர் தொடர்ந்தும் முன்வைத்துவந்தார். ஆனால் விசாரணையில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான், சர்வதேசத்தின் தலையீட்டை கோருகின்றார். தென்னிலங்கை சிங்கள பௌத்த தேசியவாதிகள், சர்வதேசத்தின் தலையீட்டை கோருபவர்களை தேசத் துரோகிகளென்று கூறுவதுண்டு. அந்த துரோக வரிசையில் மல்கம் ரஞ்சித்தும் இணைந்திருக்கின்றார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே முன்னுக்கு பின் – முரண்பாடான கருத்துக்கள் வெளியாகியிருந்தன. ஆரம்பத்தில் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது அவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். ஈஸ்டர் தாக்குதல் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான 'இஸ்லாமிய அரசு' (ஐ.எஸ்) என்னும் அமைப்பினால் நடத்தப்பட்டது. தாக்குதல் இடம்பெற்ற முறைமையும், தாக்குதலின் இலக்குகளும், அதன் சர்வதேச வலையமைப்பை மிகவும் துல்லியமாக வெளிக்காட்டுகின்றன. இவ்வாறானதொரு தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கைளும் இருந்ததாகவே கூறப்பட்டது. ஆரம்பத்தில், இதற்கு பின்னால் சர்வதேச சக்தியொன்று இருப்பதாகவும் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டிருந்தார். அவரே பின்னர் குற்றவாளிகளை கைது செய்ய வேண்டுமென்றும் அரசாங்கத்தை கோரியிருந்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான மல்கம் ரஞ்சித்தின் தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு வடகிழக்கிலுள்ள ஆயர்கள் ஆதரவு வழங்கவில்லை. தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மல்கம் ஆதரவளிக்காமையே இதற்கான காரணமாக இருக்க வேண்டும். ஈஸ்டர் தாக்குதலால் கிழக்கு மாகணத்தை சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் கொல்லப்பட்டிருக்கின்ற போதும், வடகிழக்கை சேர்ந்த தமிழ் கத்தோலிக்க மதபீடம் அதற்கான நீதியை கோரும் மல்கம் ரஞ்சித்தின் போராட்டத்தோடு தங்களை இணைத்துக் கொள்ளவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் – இலங்கையின் கத்தோலிக்க மத பீடமானது, தமிழ் – சிங்களமென்று பிளவுற்றிருப்பது வெளிப்படையான ஒன்றாகும்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரை சந்தித்து விளக்கமளித்திருக்கின்ற நிலையில், வழக்கமாக ஈழத் தமிழர்கள் மட்டும் கூடும் ஜெனிவாவில், இம்முறை, சிங்கள அரசியல் வாதிகளும், சிங்கள பேராயரும் நீதி வேண்டி கூடியிருக்கின்றனர். இதுவரையில் இலங்கைக்குள் நீதி சாத்தியமில்லை என்று தமிழர்கள் கூறிவந்த நிலை போய், சிங்களவர்களும் இலங்கை அரசாங்கத்தினால் நீதியை உறுதிப்படுத்த முடியாதென்று கூறும் நிலைமை உருவாகியிருக்கிறது. அரசாங்கத்தை பொறுத்தவரையில் தமிழர்களின் கோரிக்கையை விடவும் பேராயர் மல்கம் ரஞ்சித்தின் கோரிக்கை வலுவானது. ஏனெனில் தமிழர்களை விடுதலைப் புலிகளோடு தொடர்புபடுத்தி, எதிர்வாதம் புரியலாம் ஆனால், பேராயர் மல்கம் ரஞ்சித்தின் மீது அவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது.

# 'ஒப்பரேஷன் கங்கா' – இந்திய பிரஜைகளை உக்ரைனிலிருந்து மீட்கும் வான்வழி நடவடிக்கை!

அலசுவது இராஜதந்திரி

இந்திய விமானப்படை ஓரிரு வருடங்களுக்கு முன்னர் தனது பலத்தை அதிகரிக்கும் வகையில் பெற்றுக்கொண்ட ராட்சத விமானங்களில் முதன்மையானதே Globe Master C-17 என்றழைக்கப்படுகின்ற அமெரிக்க போக்குவரத்து விமானமாகும்.

இராணுவ நடவடிக்கைகளின்போது படையினரையும் எடை கூடிய கவச வாகனங்கள், டிரக் வண்டிகள், போன்றவற்றை வேண்டிய இடங்களுக்கு கொண்டு செல்லும் தகைமை உடையதே இந்த ராட்சத விமானமாகும்.

இது தவிர ரஷ்ய தயாரிப்பான Ilyushin II-76 என்ற இந்திய விமானப்படையிடமுள்ள ரஷ்ய தயாரிப்பான மற்றுமொரு ராட்சத போக்குவரத்து விமானமும் தற்போது இந்திய விமானப்படையினால் ரஷ்யாவிலிருந்து இந்தியப் பிரஜைகளை குறிப்பாக ரஷ்யாவில் கல்வி பயிலும் மாணவர்களை இந்தியா அழைத்துவர விரிவாக பயன்படுத்தப்படுகின்றது.

எனவே ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு இந்திய பிரஜைகளை அழைத்து வரும் விசேட ஆகாய மார்க்கமான நடவடிக்கைக்கு "ஒப்பரேஷன் கங்கா" எனப் பெயரிடப்பட்டுள்ளது. கங்கை நதி இந்தியாவில் எவ்வளவு தூரம் ஒரு புனிதமான நதியாக மதிக்கப்படுகின்றதோ, அதேபோல ரஷ்யாவிலிருந்தும் இந்திய பிரஜைகளை பாதுகாப்பாக மீட்டுவரும் நடவடிக்கையும் புனிதமானது என்ற அர்த்தத்தை ஏற்படுத்தும் விதத்திலேயே இந்த ஆகாய மார்க்கமான மீட்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இராணுவ ரீதியாக மேற்கொள்ளப்படும் மனிதாபிமான நடவடிக்கையோ அல்லது போர் நடவடிக்கையோ எதுவாக இருப்பினும் அதற்கு பெயரிடப்படுவது வழக்கமாகும். இலங்கையில் கூட இந்திய விமானப்படை 1987ஆம் ஆண்டு வடமராட்சி இராணுவ நடவடிக்கை வடக்கே இடம்பெற்றபோது யாழ். குடாநாட்டு மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொட்டலங்கள் என்பவற்றை ஆகாய மாக்கமாகப் போட்டிருந்தது. இந்தியாவின் இந்த விசேட நடவடிக்கைக்கு "ஒப்பரேஷன் பூமாலை" என்று பெயரிடப்பட்டிருந்தது.

இவ்வகையில் தற்போது உக்ரைனில் தங்கியுள்ள இந்திய மாணவர்கள் உட்பட அங்குள்ள இந்திய பிரஜைகளை பாதுகாப்பாக இந்தியாவுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகளை இந்திய விமானப்படை ஆரம்பித்துள்ளது. இந்த விசேட நடவடிக்கைக்கே "ஒப்பரேஷன் கங்கா" என பெயரிடப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் 2 ஆம் திகதி "ஒப்பரேஷன் கங்கா" ஆரம்பமானது. இந்த விசேட மனிதாபிமான நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கும் நாட்குறிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 8ஆம் திகதிக்குள் ஒப்பரேஷன் கங்காவை நிறைவு செய்து உக்ரைனிலுள்ள இந்திய பிரஜைகள் அனைவரையும் பாதுகாப்பாக தாயகம் அழைத்துவர நாட்குறிக்கப்பட்டுள்ளது.



உக்ரைனில் மாணவர்கள் உட்பட ஏராளமான இந்தியர்கள் தங்கியுள்ளனர். தொழில் நிமித்தமாகவும் வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டும் 6,300 இந்தியர்கள் உக்ரைனில் இருந்து வருகின்றனர். இவர்கள் அனைவரையும் 31 தடவைகள் விமான சேவைகள் மூலம் இந்தியாவுக்கு அழைத்துவர இந்திய அரசு "ஒப்பரேஷன் கங்கா" வின் கீழ் திட்டமிட்டுள்ளது.

இதுதவிர ரஷ்ய - உக்ரைன் போர் மூண்டதையடுத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தங்கியுள்ள 14ஆயிரம் இந்திய பிரஜைகளையும் இந்தியா அழைத்துவரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏனெனில் ரஷ்ய - உக்ரைன் யுத்தம் விரிவடையும் பட்சத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பாதிப்படைய நேரிடும். அச்சமயம் அங்குள்ள இந்தியர்கள் பாதிக்கப்படலாம். இதன் காரணமாகவே கிழக்கு ஐரோப்பாவிலுள்ள இந்தியர்களையும் தாயகத்துக்கு அழைத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்திய மாணவர்களை ரஷ்யா மற்றும் உக்ரைனிலிருந்து விரைந்து தாயகத்துக்கு கொண்டுவரும் நடவடிக்கைகள் உத்வேகம் பெற்றமைக்கான காரணம் உக்ரைனில் இரு மாணவர்களின் மரணங்களேயாகும்.


நவீன் சேகரப்பா என்ற கர்நாடக மாநிலத்தைச்சேர்ந்த 21 வயதான மாணவன் உக்ரைனில் நான்காம் ஆண்டு மருத்துவ மாணவனாக பயின்று வந்தான்.

ரஷ்ய - உக்ரைன் எல்லையை அண்டிய காக்கிவ் என்ற பகுதியில் தங்கியிருந்த இம்மாணவன் வெளியே தனக்கு உணவு வாங்குவதற்காக கடையொன்றுக்கு சென்றபோதே அங்கு ரஷ்ய தரப்பிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லில் சிக்கி பலியானார்.

இதனையடுத்து சந்தன் ஜின்டால் என்ற மற்றுமொரு இந்திய மாணவன் தலையில் ஏற்பட்ட உபாதையொன்று காரணமாக பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு உக்ரைனிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார்.

இந்த இரு மரணங்களும் ரஷ்யா மற்றும் உக்ரைனில் தங்கியுள்ள இந்தியர்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி விட்டுள்ளதையடுத்தே இந்திய அரசின் ரஷ்யா - உக்ரைனிலிருந்து தனது பிரஜைகளை பாதுகாப்பாக மீட்கும் "ஒப்பரேஷன் கங்கா" மீட்பு நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு




**மேடம்**
உறவினருடன் சமீபத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் அகலும். முன்னேற்றப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். சுபநிகழ்ச்சி பற்றிய செய்திகள் உங்களுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தும்.

**இடபம்**
தன்னம்பிக்கையால் சாதிப்பீர்கள். கலகலப்பான நாள். தொழில் முன்னேற்றம் ஓரளவுக்கு உண்டு. பயம் நீங்கும். தன் பயத்தை கைவிட்டு சாதனைக்கு முயல்வீர்கள்.

**மிதுனம்**
அரசியல்வாதி ஒருவருடன் இன்று ஏற்படும் நட்பு பயன் தரும். மனதுக்குப்பிடித்தவரின் மன நிறைவால் மகிழ்ச்சி வந்து சேரும்.உங்களது தேவைகள் சிறு முயற்சியில் நிறைவடையும்.

**கடகம்**
குடும்பத்தினரின் செயல்பாடுகள் மனதிற்கு நிறைவு தரும்.முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு நிறையப் பாடுபடுவீர்கள். புதிய மனிதர்களை நம்பி எதையும் பேச வேண்டாம்.

**சிம்மம்**
உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும் .புதியவரை நம்பிச் செயல்பட்ட விஷயம் நல்ல முடிவிற்கு வரும் . உறவினர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள்.

**கன்னி**
எதிர்பார்த்த செய்தி கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.பல நாள் எதிர்பார்ப்பு ஒன்று இனிதே நிறைவேறும்.உங்களுடைய வெளிவட்டாரப் பயணம் உறுதியான தகவலை தரும்.

**துலாம்**
மனதிற்கு பிரியமான சிலரை சந்திப்பீர்கள். மனச்சோர்வு நீங்கும்.எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றிகரமாக நடை போடுவீர்கள்.இன்று உறவினரிடம் பேசுவதால் மனதில் இருந்த சுமை குறையும்.

**விருட்சிகம்**
நெருங்கிய நண்பர் ஒருவர் உங்கள் தேவையை பூர்த்தி செய்யலாம்.பணியிட மாற்றம் உறுதி ஆகலாம். உடல்நலம் மேம்படும்.மனதில் ஏற்பட்டிருந்த படபடப்பு நீங்கும். குழந்தைகள் வெற்றி அடைவர்.

**தனுசு**
எதிலும் அவசரம் வேண்டாம். வார்த்தைகளை கவனமாகக் கையாளுங்கள்.பெற்றோரால் சங்கடம் ஏற்பட்டாலும் நன்மையும் உண்டாகும்.சொத்து வாங்கும் விஷயத்தில் யோசித்து முடிவு எடுங்கள்.

**மகரம்**
குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் தீரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.எதையும் நிதானித்து செய்வீர்கள். மனதிடம் அதிகரிக்கும்.வேற்று மொழி பேசுபவரால் நன்மை காண்பீர்கள்.

**கும்பம்**
நீங்கள் நல்ல நோக்கத்துடன் செய்யும் செயலை பிறர் விமர்சிப்பர்.சகோதர, சகோதரிகளால் முன்பு ஏற்பட்ட கவலை நீங்கும்.உடல் ஆரோக்யத்தில் சிறு தொல்லை ஏற்பட்டு மறையும்.

**மீனம்**
தொழில் செய்பவர்கள் கவனத்துடன் செயல்படுவது நல்லது. உற்சாக மனதுடன் பணியாற்றுவீர்கள். பிறரிடம் பாராட்டு பெறுவீர்கள். செலவுகளை குறைக்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

# சசிகலா, தினகரனை நிபந்தனைகளின்றி மீண்டும் அ.தி.மு.கவில் சேர்க்க வேண்டும்

## ஓபிஎஸ் முன்னிலையில் பரபரப்பு தீர்மானம்



சென்னை, பெப். 04

அ.தி.மு.க. - அ.ம.மு.க. ஒருங்கிணைத்து செயல்படவும், சசிகலா, தினகரன் ஆகியோரை நிபந்தனையின்றி சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஓ.பன்னீர்செல்வம் முன்னிலையில் தேனி மாவட்ட நகர, ஒன்றிய நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேனி மாவட்டம் கைலாசபட்டியில் உள்ள அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்தின் பண்ணை வீட்டில் நேற்று முன்தினம் மாலை ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொண்டார்.

தேர்தல் தோல்வி குறித்து கட்சி நிர்வாகிகள் பலரும் பல்வேறு கருத்துகளையும், விமர்சனங்களையும் முன் வைத்துப் பேசினர். இதில் தனித்தனியாக பிரிந்து செயல்பட்டதால்தான் இந்த தோல்வி ஏற்பட்டுள்ளது. எனவே அ.தி.மு.க. மற்றும் அமமுக இணைந்து செயல்பட வேண்டும். என்று ஓ.பன்னீர்செல்வத்திடம் பலரும் வலியுறுத்தினர்.

கட்சி நிர்வாகிகள் தங்கள் கருத்துகளை தீர்மானமாக நிறைவேற்றித் தர ஓ.பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து சசிகலா, தினகரன் உள்ளிட்டவர்களை ஒருங்கிணைத்து ஒரே இயக்கமாக செயல்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இதையடுத்து “சென்னை சென்று கட்சி தலைவர்களுடன் பேசி விரைவில் முடிவு எடுப்போம்” என ஓ.பன்னீர்செல்வம் அ.தி.மு.கவினருக்கு உறுதியளித்தார்.

# முதல்வர் ஸ்டாலின் டுபாய் பயணமாகிறார் முதலீட்டாளர் மாநாட்டில் பங்கேற்பார்

சென்னை, பெப். 04

தொழில் துறையில் தமிழகத்தை முதல் இடத்துக்கு கொண்டுவரும் வகையில் அ.தி.க. முதலீடுகளை ஈர்க்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இம்மாத இறுதியில் டுபாய் பயணமாகின்றார்.

192 நாடுகள் பங்கேற்கும் கண்காட்சி டுபாயில் நடைபெற உள்ளது. இம்மாத இறுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள இதில், தமிழக அரசு சார்பில் கைத்தறி, விவசாயம் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் மற்றும் பெருந்தொழில்கள் தொடர்பான அரங்கம் அமைக்கப்பட உள்ளது. இந்த அரங்கத்தின் மூலம் தமிழகத்தில் தொடங்க அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

மேலும், டுபாயில் தமிழகம் சார்பில் அமைக்கப்படும் காட்சி அரங்கை திறந்துவைத்துப் பங்கேற்பதுடன், முதலீடுகளை ஈர்க்கவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டமிட்டுள்ளார். இதற்காக வரும் 26, 27-ம் திகதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் டுபாய் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், முதல்வரான பின் மு.க.ஸ்டாலின் மேற்கொள்ளும் முதல் அயல்நாட்டுப் பயணமாக இது அமைய உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஜெயக்குமாருக்கு நிபந்தனையுடன் பிணை

சென்னை, பெப். 04

சென்னை மாநகராட்சி வாக்குச்சாவடி ஒன்றில் கள்ள வாக்கு போட முயன்றதாக தி.மு.க. பிரமுகர் ஒருவரை தாக்கியதாக பதிவான வழக்கில் கைதான அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நிபந்தனையுடன் பிணையில் விடுதலையாகியுள்ளார்.

அவரது பிணை மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுட்டது. விசாரணையின் போது, ஜெயக்குமாருக்கு நிபந்தனை பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளது.

மேலும் திருச்சியில் தங்கியிருந்து அங் குள்ள பொலிஸ் நிலையத்தில் 2 வாரங்களுக்கு கையெழுத்திட வேண்டும் என்றும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடுமையான நிபந்தனையுடன் ஜெயக்குமாருக்கு பிணை வழங்கலாம் என்று பொலிஸார் தெரிவித்ததை தொடர்ந்து, அவருக்கு இந்த பிணை வழங்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைனில் மாணவர் மரணம் நீட் தேர்வு விலக்க வேண்டியதை உணர்த்துகின்றது

## சுட்டிக்காட்டுகின்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, பெப். 04

உக்ரைனுக்கு மருத்துவம் படிக்கச் சென்று, போரில் உயிரிழந்த மாணவரின் துயர நிலை நீட் தேர்வு விலக்கப்படவேண்டியதின் அவசியத்தை மீண்டும் உணர்த்துகிறது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். எனவே, நீட் தேர்வு இரத்துக்காக இணைந்து போராடுவோம் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “நீட் தேர்வால் மருத்துவம் படிக்கும் வாய்ப்பை இழந்து, அதிகக் கட்டணம் செலுத்த முடியாமல் தனது கனவை நனவாக்க உக்ரைன் நாட்டுக்குச் சென்று மருத்துவம் படித்த கர்நாடக மாணவர் நவீனின் இழப்பு மிகுந்த வேதனையை அளிக்கிறது.

உக்ரைனில் இருந்து வெளியேற முடியாமல், தங்களது மருத்துவக் கனவு என்ன ஆகுமோ என்ற கவலையில் மாணவர்கள் பெரும் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். உள்நாட்டில் படிக்க முடியாமல், வெளிநாடு சென்று படிக்க முற்பட்ட மாணவர்களின் ஆர்வத்தையும், அதற்காக கஷ்டப்பட்டு தங்களது சொத்துகளை விற்று சொந்த சேமிப்புகளை கரைத்து மேல் படிப்புக்கு உக்ரைனுக்கு அனுப்பி வைத்த பெற்றோர்களின் உணர்வுகளையும் கொச்சைப்படுத்தும் வகையில் கருத்துகளை இந்திய அரசு வெளியிட வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

ஈழநாடு



## ஒறுத்து வாழ்வோம்



வெள்ளி மத்தேயு 9:14-15

தவக்காலப் பக்தி முயற்சிகளில் நோன்பு ஒன்று என்று மத்தேயு தமது நற்செய்தியில் குறிப்பிடுகிறார். நாம் எல்லோரும் நோன்பு இருக்க வேண்டும். அதற்கு ஏற்ற காலமும் நேரமும் இருக்கிறது என்கிறார் இயேசு. நாம் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தவர் இயேசு. அவர் பிறப்பு நம் எல்லோருக்கும் மகிழ்ச்சி ஊட்டும் நற்செய்தி அவர் தயவு பெற்றவருக்கு அமைதி அளித்த மகிழ்ச்சியின் விழா. அவருடைய வாழ்க்கையே பிறருக்கு மகிழ்வழித்த வாழ்க்கை. அவர் நமக்கு விட்டு சென்றதும் மகிழ்ச்சியே. எனவே மகிழ்ச்சி என்பது பிறப்புரிமை

எனவே, இத்தவக்காலத்தில் இயேசுவோடு இணைந்து மகிழ்ச்சியில் அக்கழிப்போம். இம் மகிழ்ச்சியை பிறறோடு பகிர்ந்து கொள்ள பிறருக்கு உதவிசெய்ய, இல்லையென வந்தோருக்கு ஈதல் செய்து நலிவோரின் கண்ணீர் துடைக்க எம்மிடம் உள்ள மகிழ்ச்சியை பிறறோடு பகிரவும் எம்மை ஒறுத்து வாழ்வோம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா**

## நெருக்கடி நிலைமையிலிருந்து மீள சர்வகட்சி மாநாட்டை உடன் கூட்டுக!

### அரசிடம் வலியுறுத்துகிறார் மைத்திரிபால



**கொழும்பு, மார்ச் 04**

**நாடு கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், இந்நிலையில் இருந்து மீள்வதற்கு சர்வகட்சி மாநாட்டைக் கூட்டவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரச பங்காளிக் கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மைத்திரிபால சிறிசேன மேற்படி யோசனையை அரசிடம் முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, முக்கியமாக அதே போல முன்னுரிமை அடிப்படையில் செய்ய வேண்டிய விடயங்களுக்கே அரசு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும். வீதி புனரமைப்பு போன்ற பணிகளை உடன் நிறுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். மருந்து பொருட்களை வாங்குவதற்கான டொலர்களை திரட்டிக்கொள்ள வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாம் கூட்டணி ஒன்றை அமைத்தோம். தேர்தலுக்கு பிறகு அந்த கூட்டணி கூடவே இல்லை. எமக்கு அரசுக்குள் கதைப்பதற்கு இடமும் இல்லை. எனவேதான் இப்படியான கூட்டங்களை நடத்தி யோசனைகளை முன்வைக்கின்றோம்.

எதிரணிகளும் ஆட்சி மாற்றம் பற்றி மட்டும் சிந்திக்காமல், நாட்டை மீட்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார். (அ)

## முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குறித்து விசேட கலந்துரையாடல்

முல்லைத்தீவு, மார்ச் 04

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மாவட்ட செயலாளர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.ஜெசிந்தன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## இணைய வழி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 04

நூலக நிறுவனத்தினால் நிகழ்த்தப்படும் இணைய வழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 30 ஆவது நிகழ்வாக "மகளிர் மையவாதச் சிந்தனைகளோடு இணையும் ஆவணப்படுத்தல்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை இரவு 7.30 மணிக்கு இடம் பெறும்.

இக்கலந்துரையாடலை மகளிர் அபிவிருத்தி நிலைய நிர்வாக இயக்குநர் சரோஜா சிவச்சந்திரன் வளவாளராகக் கலந்து கொள்வார். ஒருங்கிணைப்பாளராக றஞ்சனி பத்மநாதன் செயற்படுவார்.

இணைப்பு - https://us02web.zoom.us/j/81415584070, Zoom Meeting ID : 81415584070

## ரஷ்யாவுக்கு எதிராக பிரேரணை; இலங்கை நடுநிலைமை வகிப்பு!

கொழும்பு, மார்ச் 04

உக்ரைனில் இருந்து ரஷ்யப் படைகளை முழுமையாக அகற்றுமாறு கோரும் பிரேரணை ஐ.நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, சீனா , பாகிஸ்தான் உட்பட 35 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்காமல் நடுநிலை போக்கை கடைப்பிடித்தன.

ரஷ்யா, பெலாரஸ், வட கொரியா, சிரியா, எரித்திரியா ஆகியன மேற்படி பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன. 141 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன.

ரஷ்யா "உடனடியாக, முழுமையாக மற்றும் நிபந்தனையின்றி அனைத்து இராணுவப் படைகளையும் திரும்பப் பெற வேண்டும்" என்று அந்தத் தீர்மானம் கோருகிறது. (அ)

## மின்வெட்டு நேரத்தில் கொள்ளை சம்பவங்கள்

கொழும்பு, மார்ச் 04

நாட்டில் இரவுவேளைகளிலும் மின்வெட்டு அமுலாவதால், கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன என்று பொலிஸ் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த இரண்டு வாரங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களில் அதிகமானவை, மின்சாரம் துண்டிக்கப்பட்டபோது இடம்பெற்றவை என தெரியவந்துள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மின்சாரம் துண்டிக்கப்படும் போது பல இடங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமெராக்கள் செயலிழப்பதும் திருட்டு அதிகரிக்க காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை ஹொரேதுடுவ பிரதேசத்திலுள்ள விகாரையொன்றில் சில தினங்களுக்கு முன்னர் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நேரத்தில் திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

விகாராதிபதியின் அலுவலக அறையில் உள்ள தங்க தாயத்து மற்றும் பெறுமதிமிக்க பொருட்கள் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

விஹாரையில் சி.சி.ரி.வி கமெராக்கள் பொருத்தப்பட்டு இருந்தாலும் அச்சந்தர்ப்பத்தில் மின்வெட்டு அமுலில் இருந்ததால் அவை செயலிழந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய சில இடங்களிலும் மின்வெட்டு வேளையில் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (அ)

## 'அன்பே சிவம்' நூல் வெளியீடு

முல்லைத்தீவு, மார்ச் 04

தமிழ்ச் சைவப் பேரவை பொதுச் செயலாளர் மருத்துவர் சுதர்மனின் 'அன்பே சிவம்' (திருமந்திரமும் திருவாசகமும் கூறும் குறுங்கதைகள்) நூல் சைவ மகா சபை வெளியீடாக மகா சிவராத்திரி அன்று வெளியிடப்பட்டது.

அகில இலங்கை சைவ மகா சபையின் வன்னிப் பிராந்திய தலைமையகமான மாங்குளம் சிவஞான சித்தர் பீடத்தில் தமிழ்ச் சைவப் பேரவைத் தலைவர் முன்னாள் நீதிபதி வசந்த சேனன் வெளியீட்டு வைக்க மலையக குரு முதல்வர் தவத்திரு திருஞான சோதி அடிகளார் பெற்று கொண்டார்.

அகில இலங்கை சைவ மகாசபையின் பொதுச்செயலாளர் பரா நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வு இடம் பெற்றது.

தமிழ்ச் சைவப் பேரவையின் தலைவர் சிவத்திரு இ. வசந்தசேனன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு வெளியீட்டு உரையையும் நிகழ்த்தினார்.

கௌரவ விருந்தினராக ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி த. யோகானந்தராசா கலந்து கொண்டு உரை ஆற்றினார்.



சைவ மகா சபையின் வன்னிப் பிராந்திய தலைவர் சிவத்திரு சுரேந்தர், சைவ அறப்பணி நிதிய பொறுப்பாளர் அருள். சிவானந்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர் அறநெறி மாணவர்களின் திருமந்திர ஒதுகை அறநெறி கீதம் இசைத்தல் என்பனவும் இடம்பெற்றன.

ஈற்றில் சைவ மகா சபை பத்திராதிபர் திரு.ந.பொன்ராசா நன்றியுரை வழங்கினார்.

சைவ மகா சபை தமிழ்ச் சைவப் பேரவை உறுப்பினர்கள், வன்னி சிவப்பிராந்திய அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஒரு தொகுதி நூல்கள் அமரர் நாகேசுவரி கதிர்காமநாதன் (மன்னார்) மற்றும் அமரர் தம்பையா பாலசிங்கம் (காரைநகர்) ஞாபகர்த்தமாக அறக்கொடையாக அச்சிடப்பட்டு வன்னி, மலையக, கிழக்கு சிவப்பிரார்திய சைவச் சிறார்களுக்கு, ஆசிரியர்களுக்கு விநியோகிக்க இணைப்பாளர்களிடம் வழங்கப்பட்டது. (அ-02)

## பரசிட்டமோல் அதிகபட்ச சில்லறை விலை ரூபா 2.30

### வர்த்தமானி வெளியானது

கொழும்பு, மார்ச் 04

வலி நிவாரணி மற்றும் காய்ச்சலுக்காக பொதுவாகப் பாவிக்கப்படும் 500 மி.கி. அளவு கொண்ட பரசிட்டமோல் மருந்துக்கான அதிகபட்ச சில்லறை விலை 2 ரூபா 30 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இது குறித்த வர்த்தமானி அறிவித்தலை சுகாதார அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

உலக சந்தையில் பரசிட்டமோல் தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருட்களின் விலை அதிகரித்ததன் காரணமாக பெரும்பாலான நிறுவனங்கள் அவற்றை இறக்குமதி செய்வதை தவிர்த்து வருகின்றன. இதனால் உள்ளூர் சந்தையில் பரசிட்டமோல் மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் பரசிட்டமோல் வில்லைகளை அவற்றின் அதிகபட்ச கொள்ளளவில் தயாரிப்பதற்கு மருந்து உற்பத்தி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதுள்ளன. தினமும் மூன்று மில்லியன் பாரசிட்டமோல் வில்லைகளை தயாரித்து வருகின்றது என அமைச்சர் சன்ன ஜயசுமண கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பஸிலை பகிரங்கமாக விமர்சிக்கிறார் விமல்!

## கொழும்பு அரசியலில் மீண்டும் பரபரப்பு



**கொழும்பு, மார்ச் 04**

**நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மீது, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்ஸ சரமாரியாகச் சொற்கணைகளைத் தொடுத்துள்ளார். இதனால் கொழும்பு அரசியலில் மீண்டும் கொதிநிலை ஏற்பட்டுள்ளது.**

அரச பங்காளிக்கட்சிகளின் முக்கிய கூட்டமொன்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது நாட்டை மீட்டெடுப்பதற்கான யோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, நிதி அமைச்சர் பஸிலை, அமைச்சர் விமல் விளாசித் தள்ளியுள்ளார்.

“எனக்கு மூளை உள்ளது, எனவே, நிபுணர்களின் ஆலோசனை தேவையில்லை எனக் கூறி, ஆணவப்போக்கில் செயல்படுபவர்களால் சவால்களை எதிர்கொள்ளமுடியாது. நெருக்கடி நிலைமைகளை சுட்டிக்காட்டி, ஒன்பது கடிதங்களை அனுப்பினோர் எனவும், ஆனால் எதற்கும் பதில் வரவில்லை எனவும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிடுகின்றார். நிதி அமைச்சரை சந்திக்க நேரம் வழங்கப்படவில்லை.

நாடு கடும் அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் மத்திய வங்கி ஆளுநருக்கு நிதி அமைச்சரை சந்திக்க முடியவில்லையெனில், பிறகு நிலைமையை விளக்கவா வேண்டும்? இனிமேலும் எம்மால் மௌனம் காக்க முடியாது. அதனால்தான் உண்மையை வெளிப்படுத்துகின்றோம்” என்றும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார். (அ)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுவந்த 120 பேர் கைது

கொழும்பு, மார்ச் 04

கொழும்பு-கிராண்ட்பாஸ் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சார இணைப்பைப் பெற்ற 120 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த அனைவரும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை அதிகாரிகள் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் என கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களில் பெரும்பாலானோர் கிராண்ட்பாஸ் - கஜிமா வத்தை பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# மீண்டும் எரிவாயு தட்டுப்பாடு ஆபத்து?

கொழும்பு, மார்ச் 04

எரிவாயுவை இறக்குமதி செய்து விநியோகம் செய்யும் நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக லிட்ரோ மற்றும் லாப் எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறித்த நிறுவனங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களை திறப்பதற்கு வங்கிகள் அனுமதி வழங்காமையால் இவ்வாறு எரிவாயு விநியோக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழ். ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத்



யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் செயற்பட்டு வரும் நிலையில், அவருக்கு எதிராக பொதுமக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு - பல முறைப்பாடுகள் பிரதமர் அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றதையடுத்து யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள் அனைத்தும் பிரதமரின் கட்டுப்பாட்டில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சர்வதேச நாணய நிதியத்துடன் ஏப்ரல் மாதமளவில் அரசு பேச்சு

## டிலான் பெரேரா கூறுகிறார்




கொழும்பு, மார்ச் 04

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் ஏப்ரல் மாதமளவில் பேச்சுகளை ஆரம்பிக்கும். அவ்வாறு ஆரம்பித்தால் சர்வதேச நிதி தரப்படுத்தல் பட்டியலில் உரிய இடத்தை தக்கவைத்துக்கொள்ள முடியும் என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏப்ரல் மாதம் பேச்சு நடத்தப்படும் என நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அந்த தேர்வும் நல்லது. பேச்சு நடத்த விருக்கும் வாய்ப்புகளை தவறவிடக்கூடாது. சர்வதேச நாணய நியதித்தால் முன்வைக்கப்படும் நிபந்தனைகளை நாம் ஏற்காமல் இருக்கலாம். ஆனால், சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் சர்வதேச தரப்படுத்தல்களில் உரிய இடத்தை தக்கவைத்துக் கொள்ளலாம். ஏனெனில் சர்வதேச நிதி நிறுவனங்களின் பின்னணியிலும் மேற்குலக ஆதிக்கம்தான் நிலவுகின்றது.

அதேவேளை, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை தீர்க்க சர்வக்கட்சி கூட்டத்தையாவது ஏற்பாடு செய்ய வேண்டும் - என்றார். (அ)

# மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 இலங்கை மீனவருக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, மார்ச் 04

மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 இலங்கை மீனவர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் மன்னிப்பு வழங்கியுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவு மற்றும் மனிதாபி மான காரணங்களுக்காகவும் மியன்மாரின் ஐக்கிய நாள் வைர விழாவை முன்னிட்டும் அவர்களுக்கு இவ்வாறு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மியன்மார் கடற்பரப்பில் அத்திமீறி நுழைந்த குறித்த 7 இலங்கை மீனவர்களும் படகொன்றுடன் கடந்த ஆண்டு கைதானமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்காவை நம்பியதாலேயே உக்ரைனுக்கு இந்த நிலை வந்தது

## உதயங்க வீரதுங்க கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 04

அமெரிக்காவை அளவுக் கதிகம் நம்பியதாலே உக்ரை னுக்கு இந்த நிலைமை ஏற் பட்டதாகவும் ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தினால் எதிர்வரும் நாட்களில் சுற்றுலாத்துறை, தேயிலை ஏற்றுமதி என்பவற்றுக்கு பாரிய தாக்கம் ஏற்படலாமென்றும் உக்ரைனுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.



இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

அமெரிக்கா உதவும் என்ற நம்பிக்கையில் உக்ரைன் இருந்தது. ஆனால் அமெரிக்கா உதவ முன்வரவில்லை. நேட்டோவில் அங்கத்துவம் பெற உக்ரைன் மேற்கொண்ட முயற்சி ரஷ்யாவின் இருப்புக்கு அச்சுறுத்தலானது. ரஷ்யாவுடன் உடன்பாட்டுடன் செல்லாது மேலைத்தேய நாடுகளுடன் நெருக்கமாக செயற்பட முயன்றதால் இந்த நிலைமை ஏற்பட்டது.

இந்த இரு நாடுகளும் எமது நட்பு நாடுகள். ரஷ்யாவிலி ருந்து எமக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அத்தோடு எமது பிரதான தேயிலை ஏற்றுமதி நாடாகவும் உள்ளது - என்றார். (அ)

# சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்பு

கொழும்பு, மார்ச் 04

கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெறாத மாணவர்களை தொழில் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களுக்கு தொழில் பயிற்சிகளை வழங்கி, அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மனிதவலு மற்றும் தொழில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுஷா கோகுல இதனைக் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

2020ஆம் ஆண்டு நடைபெற்ற கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி, சித்தி பெறாத சுமார் 98,000 மாணவர்கள் உள்ளனர்.

இவ்வாறு சித்தி பெறாத மாணவர்களின் தகவல்களை, பரீட்சைகள் திணைக்களம், எமக்கு வழங்கியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சு மற்றும் மனிதவலு மற்றும் தொழில் பாதுகாப்பு திணைக்களம் ஆகியன இணைந்து விசேட வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளன.

இவ்வாறான மாணவர்களுக்கு ஜப்பான் போன்ற நாடுகளில் பெருமளவிலான வேலை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

உள்நாட்டில் மாத்திரமன்றி, வெளிநாட்டிலும் இவ்வாறான மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் உள்ளன - என்றார். (அ)

# தமிழ்நாடு அரசின் குறிஞ்சிக் கவிமலர் விருதைப் பெற்ற கிளிநொச்சி மாணவி!



கிளிநொச்சி, மார்ச் 04

எழுத்துத்துறையில் ஆர்வம் மிகுந்து பல சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் 'குகதா' எனும் புனைபெயரில் எழுதி வரும் டக்ஸனா எனும் கிளிநொச்சி மாணவி தமிழ்நாடு அரசின் குறிஞ்சிக் கவிமலர் விருதைப் பெற்றுள்ளார்.

குகதா எனும் புனைபெயரில் மித்திரன், தினகரன் போன்ற இலங்கை பத்திரிகைகளிலும் இந்திய வார இதழ்களிலும் பிரான்ஸிலிருந்து வெளிவரும் தமிழ் நெஞ்சம் இதழ் மற்றும் தொகுப்பு நூல்களிலும் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த தினத்தை(மார்ச் 1) முன்னிட்டு மக்கள் சேவகர் தளபதியின் பொற்கால விருதுகள் -2022 இற்கான விண்ணப்பத்தில் தகுதி பெற்று இலங்கை சார்பாக குறிஞ்சிக் கவிமலர் விருதினை டக்ஸனா பெற்றுள்ளார்.

இவர் கிளிநொச்சியைச் சேர்ந்த கிருஷ்ணானந்தன் - ஜெகதீஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியாவார். (அ)



# புதைக்கப்பட்ட 176 கைக்குண்டுகள் முள்ளிவாய்க்கால் பகுதியில் மீட்பு!

முல்லைத்தீவு, மார்ச் 04

முல்லைத்தீவு-முள்ளிவாய்க்கால் பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு சன சமூக மண்டபத்துக்கு அருகில் நேற்று முன்தினம் நபரொருவர் காணியை துப்புரவு செய்துள்ளார்.

இதன்போது அவரால் குறித்த கைக்குண்டுகள் அவதானிக்கப்பட்ட நிலையில் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த பகுதிக்கு சென்ற முல்லைத்தீவு பொலிஸார் அங்கு ஆய்வுப் பணியை மேற்கொண்ட போது 176 கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டன.

இந்த நிலையில் அப்பகுதிக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின்

உத்தரவு பெறும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ)

# சிறுபான்மை மீதான இனவாதம் யுத்த வெற்றியின் பின் தீவிரம்!

## நியூசிலாந்து தூவருக்கு ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 04

**யுத்த வெற்றியின் பின்னர், 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், அதனூடாக நாட்டை கட்டியெழுப்புவதற்கும் பதிலாக, அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பொதுவாக சிறுபான்மை மக்களை குறிப்பாக முஸ்லிம்களை இலக்குவைத்து இனவாதத்தை தூண்டும் நடவடிக்கைகள் அதிகளவில் இடம்பெற்று வருவதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்லிடனிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.**



இலங்கைக்கும் மாலைதீவுக்குமான நியூசிலாந்தின் தூதுவர் மைக்கல் அப்லிடன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமை கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடினார்.

தற்போதைய நெருக்கடியாக அரசியல் கள நிலவரத்தை மையப்படுத்தியதாக உரையாடல் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடைச்சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி சிறுபான்மைச் சமூகத்தினர் அநேகர் போதிய சாட்சியங்களின்றி கைது செய்யப்பட்டு, வருடக்கணக்காக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அந்த சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டு அதற்கு பதிலாக வேறு சட்டம் கொண்டு வரப்படலாம்.

ஆனால் உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களையும் மீறி,அதில் அரசாங்கத்துக்கு தேவையான விதத்தில் சில திருத்தங்களை மட்டும் செய்வதற்கு முயற்சிக்கின்றனர்.

நான் முன்னர் நீதி அமைச்சராகவும் பதவி வகித்துள்ளேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி விசாரணை செய்த பாராளுமன்ற தெரிவுக்குழுவிலும் இடம்பெற்றிருந்தேன். அந்த தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால், அனைத்தும் மர்மமாக இருக்கிறது.

அரசாங்கத்திற்கு வாக்களித்த மக்களுக்கு அதன் மீது இப்போது வெறுப்பு அதிகரித்துள்ளது. அரசாங்கம் சரிவர பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யாததன் விளைவாக நாடு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சடைந்திருக்க வேண்டிய காலகட்டம் தாமதமாகி விட்டது. ஆனால், இன்னும் முடியும். எதற்கெடுத்தாலும் கோவிட் 19 தொற்றைக் காரணம் காட்டி சமாளித்து கொண்டு போகின்றனர்.

முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் பல விதமான தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். முஸ்லிம் எங்களது சமய, கலாச்சார ஆடைகள் அணிவதற்கு பெரும்பாலும் அனுமதி அளிக்கப்படுவதில்லை.

எங்களது நிலபுலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. தப்தர் ஜைலானி போன்ற முஸ்லிம்களின் பாரம்பரிய புராதன இடங்கள் கூட பறிக்கப்படுகின்றன.

முஸ்லிம்களின் விவாக விவாகரத்து சட்டத்திலும் பிரச்னைகளைக் கிளப்பியுள்ளனர். தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமல் தாமதமாக்கிக் கொண்டே போகின்றனர்- என்றார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தான் எழுதிய இலங்கை முஸ்லிம்கள் பற்றிய ஆய்வு நூலின் பிரதியொன்றையும் தூதுவரிடம் கையளித்தார்.

தூதரகத்தின் ஆலோசகர் சுமது ஜயசிங்ஹ மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் இணைப்புச் செயலாளரும் கல்முனை மாநகர பிரதி மேயருமான ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் இதன்போது உடனிருந்தனர். (அ)

# பொலிஸ் காவலரண் பரந்தனில் அமைப்பு




கிளிநொச்சி, மார்ச் 04

பரந்தன் நகரப்பகுதியில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் பல்வேறு வகையான குற்றச் செயல்களைத் தடுக்கும் முகமாக பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் கொலை, ஆள் மிரட்டல் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் என பல்வேறு விதமான சட்ட விரோத செயல்கள் இடம்பெறுவதாகப் பல முறைப்பாடுகள் குறித்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றன.

அந்த முறைப்பாடுகளுக்கு அமைய நேற்று முன்தினம் பரந்தன் நகரப் பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டது.

காவலரண் 24 மணி நேரமும் செயற்படும் எனவும் இதனால் இப்பகுதியில் சட்ட விரோத செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# உக்ரைன்-ரஷ்ய போரால் இலங்கைக்கு நெருக்கடி!

கொழும்பு, மார்ச் 04

உக்ரைன் யுத்தத்தினால் உலகளாவிய கப்பல் பாதைகள் மூடப்பட்டுள்ளமை இலங்கைக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைனுடனான இலங்கை வருடாந்தம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்கிறது.

கப்பல் பாதைகள் மூடப்பட்டுள்ளமையினால் இலங்கையின் சர்வதேச வர்த்தகம் பாதிக்கப்படும் ஆபத்தில் உள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் படையெடுப்பைத் தொடர்ந்து மொஸ்கோ மீதான மேற்குலக பொருளாதாரத் தடைகளுக்கு பதிலளிக்கும் வகையில், உலகின் மூன்று பெரிய கொள்கலன் கப்பல்கள் நிறுவனங்கள் ரஷ்யாவுடனான தொடர்பைத் துண்டித்துள்ளன.

இரு நாட்டுக்கும் இடையிலான யுத்தம் காரணமாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், தேயிலை ஏற்றுமதியிலும் தாக்கம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# ரஷ்ய – உக்ரைன் போரும் இலங்கையில் அதன் தாக்கங்களும்

நா.யோகேந்திரநாதன்

கடந்த சில மாதங்களாக எதிர்பார்க்கப்பட்ட உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு ஆரம்பமாகி விட்டது. அண்மைக் காலங்களில் ரஷ்யா உக்ரைன் எல்லையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான படையினரைக் குவித்ததும், அதற்கெதிராக அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலக வல்லரசுகள் தங்கள் கண்டனங்களையும் எச்சரிக்கைகளையும் விடுத்து வந்தமையும் ஒரு பெரும் போருக்கான முன்னறிவிப்பாகவே தென்பட்டன.

முன்னைய சோவியத் ஒன்றியத்தில் உக்ரைனும் ஒரு பங்காளி நாடாக இருந்து வந்தது. 1990இன் பின்பு சோவியத் யூனியனின் உடைவை அடுத்து உக்ரைன் தனி நாடாகியது. எனினும் கடந்த இரு வருடங்களின் முன்பு உக்ரைனின் துறைமுக நகரமான கிரிமியாவை ரஷ்யா கைப்பற்றிக் கொண்டது. எனினும் அதன் பின்பும்கூட உக்ரைனின் குடி மக்களின் 40 வீதமானோர் ரஷ்ய மொழி பேசுபவர்கள். அவர்கள் உக்ரைனில் தனியாட்சி கோரிக்கை கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

“நேட்டோ” அமைப்பு என்பது சோவியத் யூனியனுக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட்ட பன்னிரண்டு நாடுகளைக் கொண்ட ஒரு இராணுவ அமைப்பாகும். தற்சமயம் சில சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த நாடுகளையும் இணைத்து 30 நாடுகளைக் கொண்ட ஒரு அமைப்பாக விரிவடைந்து விட்டது.

இந்த நிலையில்தான் உக்ரைன் நேட்டோ அணியில் இணைவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. தனது எல்லையில் தனக்கு விரோதமான ஒரு படைக்கட்டமைப்பு நிலை கொள்வதை விரும்பாத ரஷ்யா, உக்ரைன் நேட்டோவில் இணைவதைக் கடுமையாக எதிர்த்து வந்தது.

ஏற்கனவே ரஷ்ய எல்லையில் அமைந்துள்ள முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளான எஸ்தோனியா, லாத்லிவியா, லிதுவேனியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளில் நேட்டோ படைகள் நிலை கொண்டுள்ளன.

எனவே உக்ரேனிலும் நேட்டோப் படைகள் நிலை கொள்ளுமாயின் தனது பாதுகாப்புக்கு அது மேலும் அச்சுறுத்தலாக அமையுமென ரஷ்யா கூறி வந்தது. ஆனால் உக்ரைன் நேட்டோவில் இணைவதில் பிடிவாதமாக இருந்தது.

இந்த நிலையில்தான் கடந்த 24ஆம் திகதி அதிகாலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உக்ரேன் மீதான போர்ப் பிரகடனத்தை வெளியிட்டார். அதையடுத்து ரஷ்ய மக்கள் செறிந்து வாழும் டான்ஸ்லான் பகுதி மூலமும் பரானஸ் நாட்டின் எல்லையூடாகவும் ரஷ்யப் படைகள் தரையிறங்கின.

போர் ஆரம்பிக்கப்பட்ட நாளிலேயே ரஷ்யாவின் 5 விமானங்களையும் ஒரு உலங்கு வானூர்தியையும் தான் சுட்டு விழுத்தி விட்டதாக உக்ரைன் அறிவித்தது. எனினும் ரஷ்யா அதை மறுத்துள்ளது. எனினும் உக்ரேனின் பாதுகாப்பு உளவுத் துறையின் தலைமைச் செயலகம் தீப்பற்றி எரிவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளையில் நேட்டோ அமைப்பு அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக முடிவெடுக்க அங்கத்துவ நாடுகளின் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்ஷுவா வான்டேக்லேயன் ரஷ்யா மீதான கடுமையான பொருளாதாரத் தடையைப் போடப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

போர் தொடங்கிய இரண்டாவது நாளிலேயே ரஷ்யப் படைகள் உக்ரைனின் தலைநகரான “கீவ்” நகரை அண்மித்து விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தற்சமயம் கீவ் நகர் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும் உக்ரேனின் இரண்டாவது பெரிய நகரம் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டு விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பெலாரஸ், சீனா போன்ற நாடுகள் ரஷ்யாவுக்கு தமது ஆதரவை வழங்கி வரும் அதேவேளையில் உக்ரேனின் பக்கம் அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்கு நாடுகள் நிற்கின்றன.

இப்படியான நிலையில் இது ஒரு உலகப் போராக விரி வடையக் கூடுமோ என்ற அச்சம் சில தரப்பினரிடம் காணப்பட்டாலும் அதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே தென்படுகின்றன. ஏனெனில் வல்லரசுகள் தம்மை கொடிய அணு ஆயுதங்களால் ஆயுதபாணியாக்கியுள்ள நிலையில் உலகப் போர் ஒன்று தொடங்குமானால் அது மீண்டும் எழமுடியாத அழிவுக்குள்ளேயே உலகத்தைத் தள்ளும்.

ஆனால் இந்த ரஷ்யரு உக்ரைன் போர் உலகின் சகல நாடுகளிலும் அரசியல், பொருளாதாரத் தாக்கங்களை ஏற்படுத்தும்என்பது எக்காரணம்கொண்டும் தவிர்க்கப்படமுடியாதாகும்.

போர் ஆரம்பித்த முதல் நாளிலேயே 100 டொலர் விற்ற அமெ ரிக்க மசகு எண்ணெய் 105 டொலராக விலை அதிகரித்து விட்டது. அதுமட்டு மின்றி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எண்ணெய் எரிவாயு என்பனவற்றை ரஷ்யாவே குழாய் மூலம் விநியோகித்து வருகிறது. உலகில் சவூதி அரேபியாவுக்கு அடுத்ததாக அதிக எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடாக ரஷ்யா விளங்கி வருகிறது. அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் இப்போரில் எதிரணிகளில் நிற்கும் நிலையில் அது உலகப் பொருளாதாரத்தில் எப்படியான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

எனினும் வல்லரசு நாடுகள் எத்தகைய நெருக்கடிகள் எழும்போதும் அவற்றுக்கு முகம் கொடுத்து நிமிர்ந்து நிற்குமளவுக்கு அவர்களுக்கு அரசியல், பொருளாதார, இராணுவப் பலம் உண்டு. ஆனால் இப்போர்களால் படுமோசமாகப் பாதிக்கப்படப்போவது வளர்முக நாடுகளேயாகும்.

ஏற்கனவே அந்நியச் செலாவணி பற்றாக்குறை, கடன் மற்றும் வட்டிக்கான தவணைப் பணங்கள், பண வீக்கம், உற்பத்தி வீழ்ச்சி, சுற்றுலாத்துறை, ஆடைகள் ஏற்றுமதி, தேயிலை ஏற்றுமதி என்பவற்றில் ஏற்பட்ட வருமான இழப்பு என்பன காரணமாக திக்குமுக்காடி வரும் இலங்கை மேலும் மேலும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் அந்நியச் செலாவணி வருமானத்தில் பெரும் பங்கு சுற்றுலாத் துறை மூலமே கிடைக்கிறது. சாதாரணமாக வருடாந்தம் 15 வீதமான ரஷ்யர்களும் 10 வீதமான உக்ரைனியர்களும் இலங்கையில் சுற்றுலா வருமானத்தில் பெரும் பங்கை வகிக்கின்றனர். இப்போர் அந்த வருமானத்தை இழக்கும் நிலைமையை ஏற்படுத்திவிடும். அவ்வாறே தேயிலை ஏற்றுமதியிலும் ரஷ்யாவாலும் உக்ரைனாலும் கணிசமான அந்நியச் செலாவணி பெறப்படுகிறது. அந்த வருமானமும் தடைப்படும் சாத்தியம் உண்டு.

இலங்கை தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ளமுடியாமல் திண்டாடி வருகிறது. அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாகவே இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக மின்வெட்டு, கைத்தொழில் உற்பத்தியில் தாக்கம், விவசாய உற்பத்தி வீழ்ச்சி, போக்குவரத்து நடவடிக்கைகளில் பின்னடைவு, பண வீக்கம் என இயல்பு வாழ்வு குழம்பிப் போயிருக்கிறது.

இந்த நிலையில் எண்ணெய் விலை பீப்பா ஒன்றுக்கு 120 டொலராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதே இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் குறுகிய காலக் கடன்களைப் பெற்று எரிபொருள் வாங்கும் நிலைமையில் எதிர்காலம் அச்சம் தரும் வகையிலேயே உள்ளது.

அடிப்படையில் சுற்றுலா, ஆடை ஏற்றுமதி, தேயிலை போன்ற விடயங்களில் பெரும் வருமான வீழ்ச்சி ஏற்படும் அதேவேளையில் நாம் இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு கூடுதல் விலை கொடுக்க வேண்டியுள்ளது.

ஆட்சியாளர்கள் இதுவரை “கொரோனா“ பிரச்னையாலேயே நாடு நெருக்கடிக்குள்ளான தெனக் கூறி வந்ததைப் போன்று இனி ரஷ்ய- உக்ரேன் போரைக் காரணம் காட்ட ஒரு வாய்ப்பு கிடைத்துவிட்டது. ஆனால் நாடு பொருளாதார ரீதியில் அதலபாதாளத்தை நோக்கித் தள்ளப்படு கிறது என்பதை வெகு காலத்துக்கு மறைக்கமுடியாது.

அதேவேளை இந்த நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான முயற்சிகள் எதுவும் அரசாங்கத்தால் எடுக்கப்படுவதாகவும் தெரியவில்லை. கடன்வாங்கி அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்வதே ஒரு தற்காலிகமான ஏற்பாடாக இருந்தபோதும் நிரந்தரமாக அது நாட்டை அதலபாதாளத்திற்குள் தள்ளும் என்பதை மறுக்க முடியாது.

- அருவி

> **அடிப்படையில் சுற்றுலா, ஆடை ஏற்றுமதி, தேயிலை போன்ற விடயங்களில் பெரும் வருமான வீழ்ச்சி ஏற்படும் அதேவேளையில் நாம் இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு கூடுதல் விலை கொடுக்க வேண்டியுள்ளது.**



# எங்களுடைய தன்னாட்சிக் கோரிக்கைக்கு மாகாண சபை முறைமை மாற்றீடு அல்ல!

## உறுதியாகக் கூறுகின்றார் சீ.வீ.கே.சிவஞானம்



“மாகாண சபை முறைமை என்பது எங்களுடைய சமஷ்டிக் கோரிக்கைக்கோ அல்லது தன்னாட்சிக் கோரிக்கைக்கோ அல்லது தாயகக் கோரிக்கைக்கோ மாற்றீடானது அல்ல. அவ்வாறு நாங்கள் சிந்திக்கவும் இல்லை” என வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சீ.வீ.கே.சிவஞானம் கருத்துரை ஆற்றிய போதே இதனை தெரிவித்தார்.

அவர் தமது கருத்துரையில் கூறியதாவது,

இந்தக் கலந்துரையாடலின் தலைப்பு “13 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தைப் பலப்படுத்தி அதன் மூலம் மாகாண சபையைப் பாதுகாத்தல்.“ இந்த இரண்டு வார்த்தைகளிலும் மிக முக்கியமான கருத்து இழையோடுவதாக நான் பார்க்கிறேன்.

அதைப் பலப்படுத் தல் என்பது இப்போது இருக்கிற மாகாண சபை முறைமையினுடைய செயற்பாடுகளில் தேவையான பல வீனங்களை நீக்கி அதைப் பலப்படுத் துவது என்பது ஒரு வாதம். மாகாண சபையைப் பாதுகாத்தல், என்று சொன் னால் அதற்கு ஏதோவொரு ஆபத்து இருக்கின்றது என்பது தெளிவுபடுகிறது. புதிய அரசியல் அமைப்பு மூலமாக மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதற்கான எத்தனத்திலே அரச இருக்கிறது என்பது தெளிவாகிறது.

1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சி வரித்துக் கொண்ட இன்று வரை நிலையாக கடைப்பிடித்து வருகின்ற சமஷ்டிக் கோட்பாட்டின் கொள்கை யிலிருந்து நாங்கள் எப்பொழுதும் விலகவில்லை. ஆகவே, அது தான் எங்களுடைய இலக்கு, இலட்சியம், நோக்கம் என்பதை வலியுறுத்துக் கொண்டு என்னுடைய கருத்தை நான் சொல்ல விரும்புகின்றேன்.

மாகாண சபை முறைமை எந்தக் காலத்திலும் தமிழ்த் தேசிய இனத்தினுடைய அரசியல், அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக நாங்கள் மட்டுமல்ல தமிழ்த் தேசியம் சார்ந்த எந்தக் கட்சியும் ஏற்றுக் கொள்ளவில்லை. அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் போன்றவர்கள் அப்பொழுது இந்த இந்திய - இலங்கை ஒப்பந்ததை நிறைவேற்ற முயலுகின்ற ராஜீவ் காந்திக்கு தெளிவாக எழுத்து மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, மாகாண சபை முறைமை என்பது எங்களு டைய சமஷ்டிக் கோரிக்கைக்கோ அல்லது தன்னாட் சிக் கோரிக்கைக்கோ அல்லது தாயகக் கோரிக்கைக்கோ மாற்றீடானது அல்ல. அவ்வாறு நாங்கள் சிந்திக்கவும் இல்லை. இந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் அதிலே இரண்டு மூன்று விடயங்கள் எங்களுக்கு மிகப் பெரிய சாதகமாக அமைகின்றது. அதிலே பந்தி 1.4 வடக்கு - கிழக்கு தமிழ்த் தேசிய மக்களுடைய தாயகம் என்பதை வரலாற்று ரீதியான தாயகமாக அங்கீரிக்கின்றது. இது ஒரு சர்வதேச இரு தரப்பு ஒப்பந்தம். சர்வதேச சட்ட வலுவானது. அதிலே பந்தி 2.18 அதுதான் முக்கியமானது. மொழி சார்ந்தது.

சிங்களம் உத்தியோகபூர்வ மொழியாக இருந்தாலும் தமிழும் ஆங்கிலமும் உத்தியோகபூர்வ மொழி ஆகும் என்ற ஏற்பாடு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பந்தி 2.18 இல் இருக்கிறது.

பலருக்கு அநேகமாகத் தெரியாத விடயம். 1991 ஆம் ஆண்டு பிரேமதாசவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது, அந்த நேரத்திலே விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலம். அவர்கள் அதிலே தலையீடு செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். ஒரு பேச்சுவார்த்தையை உருவாக்க விரும்பினார்கள். அந்த விடயத்திலே தேசியத் தலைவர் அவர்களினுடைய பணிப்புரையிலே நான் பிரேமதாசவை சந்தித்த பொழுது, தேசியத் தலைவர் மூன்று விடயங்கள் சொன்னார்கள். அதைச் சொல்ல விரும்பவில்லை. முக்கியமாக ஒரு விடயத்தை சொல்கிறேன். அரசியல் சம்பந்தமாக அவர் கேட்டால் நான் என்ன சொல்வது என்று நான் அவரிடம் கேட்டேன். அவர் எனக்குச் சொன்ன விடயம். அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய கட்டமைப்பு ஒன்றை நாங்கள் பரிசீலிக்கத் தயார் என்று சொல்லச் சொன்னார். இதற்கு பல அர்த்தம் இருக்கின்றது. அதை நான் பிரேமதாச அவர்களுக்குச் சொன்னேன். We are prepred to Consider a structure that would> provide for optimum power sharing இதிலே ஒரு முக்கியமான ஒருவிடயம் இருக்கின்றது. அவர் எந்தக் கட்டமைப்பு என்று சொல்லவில்லை. அதை நாங்கள் ஏற்கிறோம் என்றும் சொல்லவில்லை. நாங்கள் பரிசீலிக்கத் தயார் என்பதுதான்.

ஆகவே இந்தக் கட்டமைப்பு என்பது பெரிய விசயம் இல்லை. மாகாண சபை முறைமையிலே முழுக்க ஒன்றுமே இல்லை என்று சொல்ல முடியாது. அது ஒரு உள்ளூராட்சி மன்றத்துக்கு மேற்பட்டதாகப் பார்த்தோமானால் இலகுவாக அதனுடைய தேவை தெரியும். ஏன் சிங்கள தேசத்திலே அந்த இனவாத கருத்துடையவர்கள் கூட மாகாண சபை முறைமையை பாவிக்கிறார்கள். இன்றும் அவைத் தலைவர்களினுடைய இணையத்தில் நான் இருக்கிறேன். இன்றும் அவர்களைச் சந்திக்கிறேன். அவர்களும் இந்த முறைமை இருக்க வேண்டும் என்றுதான் சொல்கின்றார்கள். ஆளுநர் முறைமை வேண்டாம் என்றுதான் சொல்கிறார்கள்.

ஆக மாகாண சபை முறைமை என்பதை பெரும் அரசியலுக்குள்ளே புகுத்தி, இது தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வு என்று சொல்லி அதனாலே நாங்கள் சமஷ்டியை கைவிட்டிட்டோம் என்று சொல்கின்றனர். இது சமஷ்டிக்கு மாற்று அல்ல. சமஷ்டி முறைமையினுடைய அம்சங்கள் சில அங்கே உள்ளடக்கப்பட்டிருக்கின்றது என்பது உண்மை. அதிகாரப் பகிர்வினுடைய சில அம்சங்கள் அதிலே இருக்கின்றது என்பது உண்மை. இல்லை என்று சொல்ல முடியாது. ஆகவே இருக்கின்றதை ஏன் நாம் விட வேண்டும். இல்லாமல் செய்ய வேண்டும் என்றால் அதுக்கு அடுத்தது என்ன? இந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருகிறதோ இல்லையோ என்று என்னால் சொல்ல முடியாது. நான் நினைக்கிறேன் வராது என்று. ஒருவேளை வந்தால், அது எங்களுக்கு மிகப் பாதகமாக இருக்கும்.

ஆகவே இருக்கிறதையும் இல்லாமல் செய்ய நாங்கள் முயல்வது தவறாகும். இந்த மாகாண சபை முறைமையை இலாவகமாக வினைத் திறனுடன் செயற்படுத்தக் கூடிய ஆற்றல் இந்த இனத்திற்கு இருக்கிறது. அதை நாங்கள் சில சமயங்களிலே செய்யவில்லை. அதுக்காக முறைமை தவறு என்று சொல்ல முடியாது. இது பாராளுமன்றத்திற்கும் உள்ளூராட்சிக்கும் இடைப்பட்ட ஒரு Intermediary.

நான் பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். நாங்கள் கூடி அழுவதற்கு என்றாலும், கூடி பேசுவதற்கு என்றாலும், கூடிக் குறைகளைச் சொல்வதற்கு என்றாலும் ஒரு ஜனநாயகத் தளம் வேண்டும். அந்த ஜனநாயகத் தளம் மாகாண சபை முறைமைதான். அரசியல் அபிலாஷைகளுக்கு மாற்றீடு என்று நாங்கள் சொல்ல வரவில்லை. அரசியலில் இருக்கக்கூடிய தேவைகளை ஓரளவு சில விசயங்களை வெளிக்கொண்டு வரமுடியும். பேச முடியும், பேசிய கட்டமைப்பு. ஆகவே இதனைப் பலபடுத்துவது என்பது வேறு விடயம். பலப்படுத்தலாம், 13 ஐப் பலப்படுத்தலாம். தேவைகள் இருக்கிறது. குறைபாடுகள் இருக்கிறது. அவற்றை நீக்கலாம். முயற்சி செய்யலாம். ஆனால் மாகாண சபை முறைமையை பாதுகாக்க வேண்டும் என்றால் It is a matter for the Parliament and the southern polity.

ஆரம்பத்திலே சமஷ்டி கேட்ட பொழுது எங்கள் எல்லாரையும் சேர்த்து ஏளனம் செய்தவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு எல்லாரும் நாங்கள் ஒரு சமஷ்டி முறைமையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அதுதான் எங்களுடைய இலக்கு. அதுதான் எங்களுடை நோக்கம். அதுதான் எங்களுடைய அரசியல் எண்ணங்கள். நாங்கள் சரணடையவில்லை, கைவிடவில்லை. அப்படிஇருந்து கொண்டு இந்த இருக்கக்கூடிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல் செய்து அதிலுள்ள குறைபாடுகளை நீக்கச் சொல்லி, எங்களுடைய ஜனநாயக ரீதியிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

தந்தை செல்வா - பண்டாரநாயக்கா ஒப்பந்தம் 57 இல் தொலைந்ததும், அங்காலையும் எதிர்த்தார்கள். இங்காலையும் எதிர்த்தார்கள். இங்கும் வேண்டாம் என்றார்கள் அங்கும் வேண்டாம் என்றார்கள். கடைசியில் அவ் ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டது. இதையேதான் நாங்கள் செய்கிறோமா?

மாகாண சபை முறைமை என்பது இந்த நாட்டினுடைய அதிகாரப் பகிர்வு. ஏனென்றால் இந்திய - இலங்கை ஒப்பந்தமே எங்களுக்காக மட்டும் என்று சொல்லவில்லை. தேசிய நலன் சார்ந்தது என்றுதான் அதிலே இருக்கிறது. அதுக்காகத்தான் அது வந்தது. ஆனபடியால் 13 ஆவது திருத்தம் இருக்க வேண்டும். அதனாலேதான் இந்த மொழி உரிமை அரசியலமைப்புக்குள்ளே கொண்டு வரப்பட்டது. ஆகவே 13 ஆவது திருத்தம் பலப்படுத்தப்பட வேண்டும். மாகாண சபை முறைமை தொடர்ந்து வலியுறுத்தப்பட வேண்டும். பலப்படுத்தப்பட வேண்டும். திருத்தப்பட வேண்டும். மேன்மைப்படுத்தப்பட வேண்டும்.

அதனூடாக இந்த நாட்டில் முழு நாட்டிற்கும் ஒரு அதிகாரப் பகிர்வினுடைய முதற்படியாக, அதிகாரப் பகிர்வின் ஆரம்பப் புள்ளியாக இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தை தொடர்ந்து வலியுறுத்தி அதற்காக நாங்கள் நிற்கிறோம்.” ■

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


17. வெற்றிடங்கள் இரண்டிலும் இடம்பெற வேண்டிய உருக்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.

A ⟶ ∀ எனின், E ⟶ ..............

T ⟶ ⊥ எனின், H ⟶ ..............


(1) Ǝ H (2) Ш ⌶ (3) E H

18. முதலில் தரப்பட்ட உருவினை அமைப்பதற்குரிய உருத் துண்டுகள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

19. முதலில் தரப்பட்ட கட்டத்தினுள் உள்ள மூன்று உருத்துண்டுகளையும் ஒன்றுபடச் சேர்த்து அமைக்கக் கூடிய தனி உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

20. முதலில் தரப்பட்ட உருவினைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

21. செவ்வக வடிவமான பலகைத் துண்டு ஒன்றின் உடைந்த பகுதி ஒன்று முதலில் தரப்பட்டுள்ளது. அதன் மறுபகுதியைச் சரியாகக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

22.





30cm நீளமும் 20cm அகலமும் உடைய அட்டை ஒன்றின் ஒரு மூலையில் இருந்து உருவில் நிழற்றிக் காட்டியவாறு பக்கமொன்று 5cm அளவு கொண்ட சதுரத் துண்டு ஒன்று வெட்டி நீக்கப்பட்டது. இப்போது மீதியாக உள்ள பகுதியின் சுற்றிவர உள்ள நீளம் யாது?

(1) 90cm (2) 95cm (3) 100cm


- 23, 24 ஆகிய வினாக்களில், உருக்களில் எண்கள் எழுதப்பட்டுள்ள விதத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

23.




(1) 34
(2) 37
(3) 41

24.




(1) 12
(2) 14
(3) 16

- 25, 26 ஆகிய வினாக்களில் உள்ள எண் தொடர்கள் ஒவ்வொன்றிலும் இருந்து இரண்டு எண்கள் நீக்கப்பட்டால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் எண் கோலமாக அமையும். அவ்வாறு நீக்கப்பட வேண்டிய எண்களைத் தெரிவு செய்க.

25. 5, 7, 9, 10, 11, 13, 14

(1) 5, 9 (2) 10, 13 (3) 10, 14

## விடைகள்

17. (3) 18. (1) 19. (2) 20. (1) 21. (3)
22. (3) 23. (2) 24. (3) 25. (3)

---

கல்வி tv CHANNEL-1

**04.02.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**04.02.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# ஓட்டமாவடியில் பூங்கா வளாக கடைத் தொகுதிக்கு அடிக்கல்

மட்டக்களப்பு, மார்ச் 04

சமூக நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், பல்வேறு வேலைத்திட்டங்கள் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இதற்கமைவாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளராக கடமையாற்றி மரணித்த மர்ஹூம் லெப்பை ஹாஜியாரின் நினைவாக லெப்பை ஹாஜி சமாதான பூங்கா சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இதன் பெயர்ப் பலகை மற்றும் பூங்கா வளாகத்தில் அமைக்கப் படவுள்ள நவீன கடைத் தொகுதிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, பாலை நகர் லெப்பை ஹாஜி சமாதான பூங்கா வளாகத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு பிர தேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் கலந்து கொண்டார்.

நூற்றுக்கணக்கானோருக்கு பயன் தரும் மரக்கன்றுகளும் இதன் போது வழங்கப்பட்டன. (அ)

# கிழக்கில் தொடர் மழை!

## குளங்களின் நீர்மட்டமும் உயர்வு

மட்டக்களப்பு, மார்ச் 04

**மட்டக்களப்பு கடந்த மூன்று நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்பதால் மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.**

வாகரை, புதிய காத்தான் குடி, ஆரையம்கதி, நாவற்குடா, கொக்கட்டிச்சோலை உட்பட பல இடங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

மாவட்டத்தின் பல வீதி களில் வெள்ள நீர் தேங்கி யுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாவட்டத் திலுள்ள பிரதான குளங்களின் நீர் மட்டங்களும் உயர்ந்துள் ளதாக அந்தக் குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறி யியலாளர்கள் தெரிவித்தனர்.

அந்த வகையில், நேற்றுக் காலை 6 மணிவரை உன்னிச் சைக்குளத்தின் நீர் மட்டம் 33 அடியாகவும், உறுகாமம் குளத் தின் நீர் மட்டம் 15 அடி 6 அங்குலமாகவும், வாகனேரிக் குளத்தின் நீர் மட்டம் 19 அடி 1 அங்குலமாகவும், உயந்துள்ளன.

அத்தோடு, நேற்று காலை 8.30 மணி மணியுடன் முடி வடைந்த 24 மணித்தியாலங்க ளில் மட்டக்களப்பில் 42.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட் டக்களப்பு நிலையப் பொறுப் பதிகாரி சுப்பிரமணியம் ரமேஸ் தெரிவித்தார். (அ)

# மட்பாண்ட கைத்தொழில் நிலையம் ஏறாவூர் பிரதேசத்தில் திறந்துவைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 04

மட்டக்களப்பு ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட ஏறா வூர் 04ஆம் குறிச்சிப் பகுதியில் மட்பாண்டக்கைத்தொழில் உற்பத்தி நிலையம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

சௌபாக்கியா உற்பத்திக் கிராமம் திட்டத்தின் கீழ் ஏறா வூர் 04ஆம் குறிச்சி பகுதியில் 05 மில்லியன் ரூபா நிதி ஒதிக கீட்டில் குறித்த கட்டடம் திறந்துவைக்கப்பட்டதுடன் மட்பாண்ட உற்பத்திக்கான உப கரணங்களும் நிலையத்துக்கு வழங்கப்பட்டன.

சுமார் 40 மட்பாண்ட கைத் தொழில் உற்பத்தியாளர்கள் இந்த நிலையத்தால் பயனடை யவுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் சதா சிவம் வியாழேந்திரன் குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். ஏறாவூர் பற்று- செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந் தரம், மதகுருமார், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதி பர், பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள்,இராஜாங்க அமைச்சரின் அலுவலக உத்தி யோகர்கள், மட்பாண்ட உற்பத்தி யாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய இரா ஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்-



குறித்த எமது பிரதேசத்தில் அதிகமாக மட்பாண்ட உற்பத் தியாளர்கள் உள்ளனர். அவர்க ளுக்கு வள ரீதியான பிரச்னை அதிகம் உள்ளது.

கடந்த காலத்தில் உங்க ளுக்கு மீள்குடியேற்ற அமைச் சின் ஊடாக என்னால் 10இலட் சம் ரூபா நிதி பெற்றுத்தரப்பட் டது. அதன் பின் இன்று உங் களுக்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியில் இக்கட்டடம் உபகரணங்களுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சௌபாக்கியா உற்பத்திக் கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள பௌதீக வழங்களை கண்டறிந்து அதனூடாக உற்பத்திக்கிராமங்களை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் இன்று நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகிறது.

நாம் இந்த உதவிகளை மட் டக்களப்பு மாவட்டத்தில் 03 பிரதேச செயலகங்களில் உள்ள கிராமங்களில் பெற்றுள்ளோம்.

மேலும் பிரதேச செயலாளர் ஊடாக பணை உற்பத்தி சார்ந்த திட்ட முன்மொளிவுகளை அனுப்பியுள்ளோம்.

கிராமங்கள் தன்னிறைவடை யும் போது நாடு தன்னிறை வடையும். எமது மாவட்டம் அனைத்து வளங்களையும் கொண்டமைந்த மாவட்டம். இங்குள்ள வளங்களை பயன் படுத்துவதற்கான முறைமை இங்கு உருவாக்கப்படவில்லை. அதுதான் இங்குள்ள பாரிய குறை பாடு. வளங்களை பெற்றுக் கொடுத்து நாம் ஒழுங்கு செய் யும்போது எமக்கு தேவையா னதை நாம் உற்பத்தி செய்ய முடி யும். இந்த நாடும் இன் னொரு நாட்டில் தங்கிருக்க வேண்டிய அவசியம் உருவாகாது.

இன்று உலகளாவிய ரீதியில் எண்ணெய் விலை அதிகரித்துள் ளது. எமது நாட்டில் மட்டு மல்ல உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ளது. இவ்வாறான சூழலில் பல்வேறு பொருளா தார நெருக்கடி எமக்கு ஏற்பட் டுள்ளது-என்றார். (அ)

# கைத்தொழிலாளர்களுக்கு வாழ்வாதார உபகரணங்கள்



மட்டக்களப்பு, மார்ச் 04

ஜனாதிபதியின் சுபீட்சத்தை நோக்கு திட்டத்திற்கமைவாக பிரம்புகள் பித்தளை மட்பாண் டங்கள் மரப்பொருட்கள் மற் றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் கைத்தொழிலா ளர்களுக்கு உபகரணம் வழங் கும் நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசு தேவன் தலைமையில் மண் முனை வடக்கு பிரதேச செயல கத்தில் நேற்று இடம்பெற்றது.

இங்கு தெரிவு செய்யப் பட்ட 46 பயனாளிகளுக்கு 32 இலட்சம் ருபா பெறுமதியான கைத்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மாவட்ட ஒருங் கிணைப்புக் குழு தலைவரும் மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான சி.சந்திரகாந்தன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வுக்கு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிர தித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சுதர்சன் மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூ. பிர சாந்தன், பிரதேச செயலக உத் தியோகத்தர்கள், பயனாளிகள் எனப்பலர் சுகாதார நடை முறைகளை பின்பற்றி கலந்து கொண்டனர். (அ)

# இதயங்களை ஒன்றிணைக்கும் கிராமிய பாலத்துக்கு அடிக்கல்

மட்டக்களப்பு, மார்ச் 04

பெரிய கல்லாற்றில் அமைக்கப்படவுள்ள பாலத்துக்கான அபிவிருத்தி பணிகள், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டப்பட்டது.

அரசாங்கத்தின் சுபீட்ஷத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக, இதயங்களை ஒன்றிணைக்கும் கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், இப்பாலம் அமைக்கப்படவுள்ளது.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் முன்மொழிவுக்கு அமைவாக கிராமிய வீதி அபிவிருத்தி உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டது.

பெரியகல்லாறு, அன்னை வேளாங்கன்னி தேவாலயத்துக்குச் செல்லும் வீதியில் மிக நீண்ட காலமாக சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட பாலமே ஒன்றரைக் கோடி ரூபா செலவில் அப் பகுதி மக்கள் இராஜாங்க அமைச்சரிடம் முன் வைத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே பாலம் அமைக்கப்படவுள்ளது. (அ)



# கிண்ணியா நகர சபையின் புதிய உறுப்பினராக நசூறுதீன்

மட்டக்களப்பு, மார்ச் 04




நல்லாட்சிக்கான தேசிய முண்ணனியின் கிண்ணியா நகர சபையில் சுழற்சி முறையிலான உறுப்பினராக எம்.எம். நசூர்தீன், கிண்ணியா நகர சபைத் தவிசாளர் எம்.எம்.நிவாஸ் முன்னிலையில் நேற்று முன் தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இந்த கட்சி சார்பில் முன்னர் உறுப்பினராக செயற்பட்ட நாசிக் மஜீத் பதவி விலகியதை யடுத்து இந்த உறுப்பினர் பதவி வழங்கப் பட்டுள்ளது. இதன் பின்னர் அவர் சபை அமர்விலும் கலந்துகொண்டார்.

இந்த சத்தியப்பிரமாண நிகழ்வில் கிண்ணியா நகர சபை உறுப்பினர்களான எம்.ஏ.கலிபத்துல்லா மற்றும் எம்.எம்.மஹ்தி எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு, உலக வங்கியிடமிருந்து பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் மூலம் மானியத்தை பெற்றுள்ளதுடன் இம்மானியத்தில் ஒரு பகுதி கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களுக்காக கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பு கட்டிட நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)**இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை 2022.03.07 ஆம் திகதியில் இருந்து 2022.03.21 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் இடத்திலிருந்து 2022.03.07 ஆம் திகதியிலிருந்து 2022.03.21 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2022.03.22 ஆம் திகதி மு..ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/41(13)/2/PT-01/01/2021 | **சலவைக்குளம் அழகுபடுத்தல், இருபாலை** | 0.91 | 60 நாட்கள் | கட்டிடங்கள் சி-9 அல்லது அதற்கு மேல் | 49 நாட்கள் | 9,200.00 | 2022.05.10 |
| NP/14/41(13)/2/PT-01/02/2021 | **வலி கிழக்கு பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்தியசாலை திருத்தம், புத்தூர்** | 1.35 | 60 நாட்கள் | கட்டிடங்கள் சி-9 அல்லது அதற்கு மேல் | 49 நாட்கள் | 14,000.00 | 2022.05.10 |
| NP/14/41(13)/2/PT-01/03/2021 | **வலி கிழக்கு பிரதேச சபையின் பொது நூலகம் திருத்தம், உரும்பிராய்** | 0.91 | 60 நாட்கள் | கட்டிடங்கள் சி- 9 அல்லது அதற்கு மேல் | 49 நாட்கள் | 9,200.00 | 2022.05.10 |
| NP/14/41(13)/2/PT-01/04/2021 | **சூரியப்படல்** (Solar Panel ) **மின்விளக்குகள் விநியோகித்தல்** | 1.50 | 14 நாட்கள் | எமது சபையில் அல்லது யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் வழங்குநராக பதிவு செய்திருத்தல் | 30 நாட்கள் | 15,000.00 | 2022.05.10 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2022.03.14 ஆம் திகதி மு.ப.11.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
யாழ்ப்பாணம்
வடமாகாணம்.
2022.03/03



# சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு பின்னடைவு

ஐ.பி.எல். தொடரின் நடப்பு சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, நடப்பு தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாக பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

அணியின் முதன்மை வேகப்பந்து வீச்சாளர் தீபக் சாஹர், முழுப் போட்டியிலும் இல்லாவிட்டாலும், தொடரின் பெரும் பகுதியை இழக்கவுள்ளார்.

இறுதியாக நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான இறுதி ரி-20 போட்டியின்போது, தொடைப் பகுதியில் காயம் கண்ட தீபக் சாஹருக்கு எட்டு வாரங்கள் ஓய்வில் இருக்க மருத்துவக் குழு அறிவுறுத்தியுள்ளது.

இதனால், எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.பி.எல். தொடரின் முதல் பாதி போட்டிகளில் அவர் களமிறங்கமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

29 வயதான சாஹர், 2022 வீரர் ஏலத்தில் 1.866 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இரண்டாவது மிக விலையுயர்ந்த வீரராக வாங்கப்பட்டார்.

பந்துவீச்சு சகலதுறை வீரரான சாஹர், தனது கடைசி மூன்று ஒருநாள் போட்டிகளில், சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# தவறவிட்டார் விராட் கோலி 10 இடங்களுள் பத்தும் நிசங்க!

இலங்கை அணியின் இளம் வீரர் பத்தும் நிசங்க, ஐ.சி.சி. ஆண்களுக்கான இருபதுக்கு இருப்பது துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் 9 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இந்திய அணிக்கு எதிரான இருபதுக்கு இருப்பது தொடரில் சிறப்பாக விளையாடிய அவர், 654 புள்ளிக ளுடன் தரவரிசையில் 6 இடங்கள் முன்னேறி ஒன்பதா வது இடத்தை பிடித்துள்ளார்.

அதேநேரம் இலங்கை அணிக்கு எதிரான தொடரில் ஓய்வளிக்கப்பட்ட இந்திய அணியின் முன்னாள் தலைவர் விராட் கோலி ஐந்து இடங்கள் சரிந்து 15ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

கொரோனா காரணமாக இந்திய தொடரை தவறவிட்ட இலங்கை சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கவும் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெறவில்லை.

# ரஷ்யா, பெலாரஸ் வீரர்களுக்கு அனுமதி மறுப்பு

2022 ஆம் ஆண்டு பீஜிங்கில் நடைபெறவுள்ள குளிர்கால பராலிம்பிக் போட்டியில் ரஷ்யா மற்றும் பெலாரஸ் விளையாட்டு வீரர்கள் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என சர்வதேச பராலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, சீனாவின் பீஜிங்கில் நடைபெறும் குளிர்கால பாராலிம்பிக் போட்டியில் அவர்களுக்கு கலந்து கொள்ள முடியாது.

குளிர்கால பராலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழா இன்று நடைபெறவுள்ளதுடன் அதன் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

மற்ற உறுப்பு நாடுகளின் எதிர்ப்பால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சர்வதேச பாராலிம்பிக் குழுத் தலைவர் என்று பார்சன்ஸ் தெரிவித்தார்.

# சுதந்திரக் கிண்ண இறுதிப் போட்டியில் வடக்கை எதிர்த்தாடவுள்ள தெற்கு அணி

பலம்வாய்ந்த சப்ரகமுவ மாகாண அணிக்கு எதிராக இரத்தினபுரி சீவலி மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற 2 ஆம் கட்ட 2 ஆவது அரை இறுதிப் போட்டியில் 4 - 1 என்ற பெனல்டி முறையில் வெற்றி பெற்ற தென் மாகாண அணி, சுதந்திர கிண்ண இறுதிப் போட்டியில் வட மாகாணத்தை எதிர்த்தாட தகுதி பெற்றது.

தென் மாகாண கோல்காப்பாளர் ராஸிக் ரிஷாத் மிகவும் சாதுரியமாக செயற்பட்டு 2 பெனல்டிகளைத் தடுத்து தனது அணியை இறுதிப் போட்டிக்குள் இட்டுச் சென்றார்.

வட மாகாணத்துக்கும் தென் மாகாணத்துக்கும் இடையிலான இறுதிப்போட்டி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நாளை சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

சப்ரகமுவ அணிக்கு எதிரான 2 ஆம் கட்ட அரை இறுதிப் போட்டியில் 2 - 1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் தென் மாகாண அணி வெற்றி பெற்றது.

எனினும் முதலாம் கட்ட அரை இறுதியில் 1 - 0 என சப்ரகமுவ வெற்றி பெற்றிருந்ததால் இரண்டு அரை இறுதிகளிலும் ஒட்டுமொத்த கோல் எண்ணிக்கை 2 - 2 என சமநிலையில் முடிவடைந்தது. இதன் காரணமாக வெற்றி அணியைத் தீர்மானிக்க பெனால்டி வழங்கப்பட்டது,

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான போட்டியில் தென் மாகாண அணியை விட சப்ரகமுவ மாகாண அணி திறமையை வெளிப்படுத்தியபோதிலும் கோல் போடுவதில் பல தடவைகள் கோட்டை விட்டது. அவ்வணியின் முன்கள வீரர்கள் பல சந்தர்ப்பங்களில் இலக்கை தவறவிட்டவாறு பந்தை உதைத்தனர்.

மற்றும் சில சந்தர்ப்பங்களில் ரிஷாத் எதிரணியின் முயற்சிகளைத் தடுத்த வண்ணம் இருந்தார்.

முதலாவது பகுதி ஆட்டம் உபாதையீடு நேரத்துக்குள் சென்ற 2 ஆவது நிமிடத்தில் தென் மாகாணம் முதலாவது கோலைப் போட்டது.

சுமார் 35 யார் தூரத்திலிருந்து ஆர். ஏ. சத்துரங்க செலுத்திய பிறீ கிக் பந்தை சுப்புன் தனஞ்சய



தலையால் முட்ட, 19 வயதுக் குட்பட்ட வீரர் கேஷான் துமிது தனது வலது காலால் மிகவும் இலாவகமாக கோலினுள் புகுத்தினார்.

இடைவேளையின் பின்னர் சப்ரகமுவ வீரர் அவிஷ்க தேஷான் 2 ஆவது மஞ்சள் அட்டைக்கு இலக்காகி சிவப்பு அட்டையுடன் 52 ஆது நிமிடத்தில் களம் விட்டு வெளியேற்றப்பட்டார்.

சற்று நேரத்தில் கிடைக்கப் பெற்ற பிறீ கிக் தென் மாகாணத்துக்கு 2 ஆவது கோலைப் போட உதவியது.

அந்த சந்தர்ப்பத்தில் மைதானத்தின் வலப்புறத்தில் 25 யார் தூரத்திலிருந்து லக்ஷான் தனஞ்சய உதைத்த பிறீ கிக் பந்தை தனது தலையால் முட்டி அலாதியான கோல் ஒன்றை மொஹமத் ரிஸ்லான் போட 54 ஆவது நிமிடத்தில் தென் மாகாணம் 2 - 0 என முன்னிலையில் இருந்தது.

10 வீரர்களாக மட்டுப்படுத்தப்பட்டு 2 கோல்கள் பின்னிலையில் இருந்த போதிலும் சப்ரகமுவ மாகாண அணியினர் விடாமுயற்சியுடன் விளையாடி பல சந்தர்ப்பங்களில் தென் மாகாண கோல் எல்லையை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனால், அவர்களால் கோல் போட முடியாமல் போனது.

போட்டி 90ஆவது நிமிடத்தை தொட்டபோது சப்ரகமுவ மாகாண அணிக்கு சர்ச்சைக்குரிய வகையில் மத்தியஸ்தர் மொஹமத் இர்ஷான் பெனால்டி வழங்கினார்.

அந்த பெனல்டியை டி.எல்.ஐ. பெர்னாண்டோ கோலாக்கினார். கோலாக்கிய சந்தோஷத்தில் ஜேர்சியை கழற்றியதால் அவருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

ஆட்டம் முழு நேரத்தைத் தொட்ட உபாதையீடு நேரத்தின் 3 ஆவது நிமிடத்தில் மாற்று வீரரராக களம் புகுந்த தென் மாகாண வீரர் தரிந்து தனுஷ்க 6 நிமிடங்கள் கழித்து மத்தியஸ்தரை தூற்றியமைக்காக சிவப்பு அட்டையுடன் வெளியேறினார்.

போட்டியில் 2 - 1 என்ற கோல்கள் அடிப்படையில் தென் மாகாணம் வெற்றி பெற்றபோதிலும் ஒட்டுமொத்த கோல்கள் கணக்கில் கோல் நிலை 2 - 2 என சம நிலையில் இருந்தது.

இதனைத் தொடர்ந்து வெற்றி அணியைத் தீர்மானிக்க மத்தியஸ்தரினால் பெனால்டி முறை அமுல்படுத்தப்பட்டது.

இதில் முதல் 4 பெனல்டிகளையும் தென் மாகாணம் சார்பாக லக்ஷான் தனஞ்சய, அவிஷ்க கவிந்து, சுப்புன் தனஞ்சய, ஆர். ஏ. சத்துரங்க ஆகியோர் இலக்கு தவறாமல் கோலினுள் புகுத்தினர்.

சப்ரகமுவ சார்பாக என். தேஷப்ரிய மாத்திரம் 1ஆவது பெனால்டியை கோலாக்கினார். ஆனால், மொஹமத் முன்ஷிப், மொஹமத் ரசன் ஆகியோரது பெனால்டிகளை ராஸிக் ராஷித் தடுத்து நிறுத்தி தென் மாகாண அணி இறுதிப் போட்டியில் விளையாடுவதை உறுதி செய்தார்.

# தேசிய மெய்வல்லுநர் தெரிவுக்கான 2ஆம் கட்ட போட்டி 10, 11 ஆம் திகதிகளில்

சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவுக்கான அடைவு மட்டத்தை எட்டுவதற்காக நடத்தப்படுகின்ற தேசிய மெய்வல்லுநர் தெரிவுக்கான இரண்டாம் கட்டப் போட்டிகள் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் எதிர்வரும் 10ஆம்,11 ஆம் ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவர் ஓய்வு நிலை மேஜர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

தேசிய மெய்வல்லுநர் தெரிவுக்கான இரண்டாம் கட்ட போட்டிகளையும் முதற் கட்டம் நடத்தப்பட்ட கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்துவதற்கு தீர்மானித்திருந்த போதிலும், தற்போது தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் புதிய செயற்கை ஓடுபாதைகள் போடப்பட்டுள்ளதால், தியகமவில் நடத்துவதற்கு தீர்மானித்ததாகவும், கடந்த 4 ஆண்டுகளுக்குப் பின்னர் முதற் தடவையாக தியகம விளையாட்டரங்கில் மெய்வல்லுநர் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகவும் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் பங்கேற்பதற்கான தகுதியை பெறுவதற்கு அடைவு மட்ட விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான குறுந்தூர ஓட்ட நிகழ்வுகளான 100 மீற்றரை 10.85 செக்கன்களிலும், 200 மீற்றரை 22 செக்கன்களிலும், 400 மீற்றரை 48.20 செக்கன்களிலும் நிறைவு செய்ய வேண்டும். பெண்களுக்கான குறுந்தூர ஓட்ட நிகழ்வுகளான 100 மீற்றரை 12.50 செக்கன்களிலும், 200 மீற்றரை 25.50 செக்கன்களிலும், 400 மீற்றரை 57 செக்கன்களிலும் நிறைவு செய்ய வேண்டும்.

மத்திய தூர ஓட்ட நிகழ்வுகளான 800 மீற்றரை ஆண்கள் 1நிமிடம் 55 செக்கள்களிலும், பெண்கள் 2 நிமிடம் 15 செக்கன்களிலும், 1500 மீற்றரை ஆண்கள் 3 நிமிடம் 56 செக்கள்களிலும், பெண்கள் 4 நிமிடம் 50 செக்கன்களிலும் ஓடி முடிக்க வேண்டும்.

# ஜெனிவா மனித உரிமைகள் சபை இம்முறையாவது தீர்வு வழங்குமா?

*காணாமால்போனோரின் உறவுகள் கேள்வி*

**வவுனியா, மார்ச் 04**

**இம்முறை இடம்பெறும் ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்விலாவது எமக்கான நீதி கிடைப்பதற்கு வழி பிறக்கவேண்டும் என்று வவுனியாமாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவு களினர் சங்கம் தெரிவித்துள்ளது.**

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் நேற்று வியாழக்கிழமை வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்து தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு பத்துவருடங்கள் கடக்கின்ற நிலையில் எமக்கான நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது. தொலைத்த எமது பிள்ளைகளை காணாமல் சாட்சிகளான பல தாய்மார்கள் மரணித்துவிட்டனர். வயது முதிர்ந்த நிலையில் அடுத்த போராட்டத்துக்கு வருவோமா என்ற நம்பிக்கை அற்ற நிலையில் இந்தப் போராடங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கையில் இனப்படு கொலை தொடர்ச்சியாக இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டுமானால் ராஜபக்ஷ




குடும்பமும், இனப்படு கொலைகளுக்கு பொறுப்பாக இருந்த படைத் தளபதிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்படவேண்டும்.

யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணாமல் ஆக்கப்பட்டோர் என தெரிவித்து அவர்களின் குடும்பங்களை ஏமாற்றுகின்றது.

எனவே சர்வதேச சமூகம் எமக்கான நீதியை விரைவில் வழங்கவேண்டும். இம்முறை இடம்பெற்றுவரும் ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்விலாவது உறுதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு எமக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதற்கு உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒத்துழைக்கவேண்டும்.

எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் எமது போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துவருவோம்-என்றார். (அ)

# வடக்கில் எதிர்வரும் நாள்களில் கடும் மழை பொழிய வாய்ப்பு!

கொழும்பு, மார்ச் 04

வடக்கில் எதிர்வரும் நாட்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதால், மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் அவதானமாக இருக்குமாறும், வெங்காயம் மற்றும் சிறு தானியச் செய்கையாளர்கள் விதைத்தல் மற்றும் அறுவடை செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்வது சிறந்தது எனவும் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கே உருவான காற்ற முத்த தாழ்வு நிலை தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாற்றமடைந்துள்ளது. இது மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமான மற்றும் கன மழை கிடைக்க வாய்ப்புள்ளது.எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரை வடக்கு மாகா ணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது.

தற்போதைய நிலைமைகளின்படி இதன் மிகச் சரியான நகர்வுப் பாதையை கணிக்க முடியாதுள்ளது. எனினும் சில மாதிரிகள் இந்த தாழமுக்கம் வடக்கு மாகாணத்தின் கரையோரத்தை அண மித்தே நகரும் என காட்டுகின்றன.

அவ்வாறாயின் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் வேகமான காற்று மற்றும் இடிமின்னலுடன் கூடிய கனமழையைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக யாழ்.மாவட்டம் வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளைவிட சற்று கூடுதலான அளவு மழையைப் பெற வாய்ப்புள்ளது.

இலங்கையின் தென்கிழக்கு, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதில் மிகுந்த அவதானமாக இருப்பது அவசியமாகும்.

விவசாயிகள் குறிப்பாக வெங்காயம் மற்றும் சிறுதானிய செய்கையாளர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை அறுவடை மற்றும் விதைத்தல் செயற் பாடுகளை தவிர்த்துக் கொள்வது சிறந்தது." எனத் தெரிவித்துள்ளார். (அ)

# டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் இலங்கையை வந்தடைந்தது!

கொழும்பு, மார்ச் 04

மாலைதீவில் கடந்த மாதம் 26 ஆம் திகதி உயிரிழந்த இலங்கை தேசிய உதைபந் தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் நேற்று வியாழக் கிழமை அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வந்தடைந்தது.

இந்த நிலையில் குறித்த பூதவுடல் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பூதவுடலை பெற்றுக்கொள்ள அவருடைய மனைவி மற்றும் குடும்பத்தினர் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்.

சடலப் பரிசோதனையின் பின் பூதவுடல் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்துக்கு அஞ்சலிக்காக எடுத்து வரப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் செல்லும் வழியில் பூநகரி, முழங்காவில், தேவன்பிட்டி போன்ற இடங்களைச் சேர்ந்த உதைபந்தாட்ட கழக வீரர்கள் அவருடைய உடலுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக பவனியாக எடுத்து வரப்படும்.

பின்னர் நாளை சனிக் கிழமை மன்னார் பனங்கட்டுக் கொட்டில் உள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

எதிர் வரும் திங்கட்கிழமை மாலை மன்னார் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். (அ)









# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்.பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி நேற்று வியாழக்கிழமை பல் கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் ஆரம்பமானது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. சிறி சற்குணராஜா நேற்று ஆரம்பமான பட்டமளிப்பு விழா இன்றும் நாளையும் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

நேற்று ம் இன்றும் தலா மூன்று அமர்வுகளும்,நாளை சனிக்கிழமை இரண்டு அமர்வுகளுமாக இடம்பெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 619 பேர் பட்டங்களைப் பெறுகின்றனர்.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனாப் பெருந்தொற்றுச் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி நிகழ்நிலையில் பட்டங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கு வேந்தர் சம்பிரதாய பூர்வமாக இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட் டங்களும், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப் பட்டமையை உறுதி செய்வார்.

உயர் பட்டப் படிப்புகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில் நுட்ப பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியாப் பல்கலைக்கழகத்தை)ச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக் கும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் இந்த பட் டமளிப்பு விழாவில் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. (அ)

## தமிழருக்கு....

உள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபைக் கும் சர்வதேச சமூகத்துக் கும் இது தொடர்பில் ஒரு பொறுப்பு உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையை வரவேற்று, தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி சம்பந்தனால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கைக்கான இலங்கை அரசின் பதில் அறிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பின்னணியில் இவ் விடயம் தொடர்பில் சில முக்கிய காரணிகளை குறிப்பிடுவது முக்கியமானதாகும்.

சிறப்பு நிபுணர் குழுவின் அறிக்கையில், குறிப்பாக இறுதி யுத்த கட்டத்தில் நம்பத்தகுந்த சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றதாகவும் அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை உறுதி செய்யப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையாளரின் உள்ளக விசாரணையும் இதனையொத்த ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

இலங்கையின் தற்போதுள்ள அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களும் இதுவரை எந்தவொரு விசாரணையையும் முன்னெடுக்கவில்லை. தற்போதைய அரசாங்கமானது முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் வகையில் கலப்பு பொறிமுறை அடங்கிய இணை அனுசரணை பிரேரணையிலிருந்து விலகிக்கொண்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

இலங்கை அரசாங்கமானது சுதந்திரம் அடைந்தது முதல் நீண்டகாலமாக ஆழமான தண்டனையின்மை கலாசாரத்தில் ஊறியுள்ளது. இது தமது அரசியல் பலத்தை தொடர்ந்தும் தக்க வைப்பதற்காக சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக உள்ளக வாக்குறுதிகளை மதிக்காமலும் அதன் விளைவாக கொடுத்த வாக்குறுதிகளை செயல்படுத்துவதிலும் சரியான முடிவுகளை எடுப்பதிலும் அல்லது வேறெந்த ஒரு விடயத்திலும் தீர்மானம் எடுக்கும் நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எல்லா அரசாங்கங்களும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக பேரினவாதத்தை ஆதரிக்கும் கொள்கைகளை முன்னிறுத்தி வந்துள்ளனர். இது இலங்கை நாட்டுக்கு பாரிய பாதகங்களை கொண்டுவந்துள்ளதுடன் ஒருமித்த இலங்கை நாட்டின் மக்களையும் இது பாதித்துள்ளது. உண்மை நிலைமையை சிங்கள பௌத்த மக்களுக்கு எடுத்து கூறினால் அவர்கள் நிலைமையை புரிந்து கொள்வார்கள். ஆனால் ஒரு சில சிங்களத் தலைவர்களைவிட ஏனையவர்களுக்கு இதனை செய்வதற்கு தைரியம் இல்லை. இலங்கை முகங்கொடுத்துள்ள வரலாறு காணாத பிரச்னைக்கும் மீண்டெழுந்து வரமுடி யாத நிலைமைக்கும் இதுவே பிரதான காரணமாகும்.

இதேவேளை, ஆயுதமேந்தாத பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களின் நிலைமையை குறிப்பிடுவது முக்கியமானதாகும். இவர்கள் யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளானவர்கள். ஏனையோர் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள். ஏனையவர்கள் பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்தவர்கள்.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டு பாதிப்படைந்த இந்த மக்கள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டுகிறார்கள்.

இவர்கள் பழிவாங்கலை நாடவில்லை. மாறாக பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மீள்நிகழாமை மற்றும் தொடரும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை உறுதி செய்யுமாறே வேண்டுகின்றனர். அவர்கள் உண்மை நிலைநாட்டப்படவேண்டும் என கோருகின்றனர். உண்மை உறுதி செய்யப்படாமல் நீதி நிலைநாட்டப்பட முடியாது.

இலங்கை ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்று கொண்டுள்ளது. அத்தகைய உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது இலங்கையின் பொறுப்பாகும். இதனை செய்ய தவறுவதானது தற்போது நிலவும் தண்டனையின்மையை உறுதி செய்வதாகவே அமையும்.

தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடும், ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணை மற்றும் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் போன்றன இலங்கையில் எது நடந்தாலும் அது ஒரு உள்ளக நிகழ்வாகவும், இறையாண்மை தொடர்பான விடயமாகவும் அதில் வெளி தலையீடுகள் இருக்க முடியாது எனவும் எண்ணுவதற்கு தூண்டுகிறது. இலங்கையின் தண்டனையின்மை கலாசாரமானது சர்வதேச மட்டத்துக்கு கொண்டுசெல்ல வேண்டிய தருணத்தை எட்டியுள்ளது.

சொந்த மக்களது இறையாண்மை மதிக்கப்பட்டு அவர்கள் சுய மரியாதை மற்றும் கௌரவம், சமத்துவம் மற்றும் நீதி மேலும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களில் இருந்து பாதுகாக்கபடுகின்றபோது தான் ஒரு நாட்டின் இறையாண்மை புனிதத்துவம் பெறுகின்றது என்பதனை குறிப்பிடவேண்டும். ஆனால் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இத்தகைய நிலைமை இல்லாத நிலையில் அரை வாசிக்கும் மேலதிகமானவர்கள் கடந்த தசாப்தங்களில் பல்வேறு நாடுகளில் குடியேறியுள்ளனர்.

இந்நிலைமை தொடர்ந்தால், செழுமையான மொழியையும், கலாசாரத்தினையும், நாகரீகத்தினையும், பாரம்பரியத்தினையும் கொண்ட தமிழ் மக்கள் இலங்கையில் இல்லாமல் போய்விடுவார்கள். தமிழ் மக்கள் தமது பூர்வீகமான வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஒன்றிணைந்த - பிரிவுபடாத இலங்கையில்,அர்த்தமுள்ள அதிகார பிரயோகத்துடன் தொடர்ந்தும் வாழ விரும்புகிறார்கள். இது உறுதி செய்யப்படவேண்டியது அடிப்படையாகும்.

தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் இந்த நிலைமைக்கு தமீழீழ விடுதலை புலிகளே காரணம் என கூறுகின்றனர். ஆனால், சுதந்திரத்திற்கு பின்னர் தமிழ் மக்களிற்கெதிரான கலவரங்கள் இடம்பெறாமல் இருந்திருந்தால், தமிழ் மக்களை இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் பாதுகாத்திருந்தால், இலங்கை பிரதமர்களுக்கிடையிலும் தமிழ் தலைவர்களுக்கிடையிலும் ஏற்ப்படுத்தபட்ட ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால், தமிழ் மக்களின் சார்பில் தமீழீழ விடுதலைப் புலிகள் தோன்றியிருக்கமாட்டார்கள் என்பதனை குறிப்பிடவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இது தொடர்பில் ஒரு பொறுப்பு உள்ளது. சமாதானமும் மீள நிகழாமையும் இந்த விடயங்கள் யதார்த்தமாக தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்றன-என்றுள்ளது. (அ-2)

## எரிசக்தி....

லொக்குகே பொறுப்பேற்றுள்ளதுடன், மின்சக்தி அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சி பொறுப்பேற்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால், அவசர அமைச்சரவை மறுசீரமைப்பு நேற்று மாலை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விமல்,....

டுள்ளனர். இவர்கள் இருவர் மீதும் அரச தரப்பு எம்.பிக்கள் கடும் விசனம் வெளியிட்டு வந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய நேற்று மாலை இந்த அதிரநடவடிக் கையை மேற்கொண்டார்.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக குறித்த இருவரும் நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மையில் அரசாங்கத்தின் 11 அங்கத்துவக் கட்சிகள் இணைந்து தேசியக் கொள்கையை வெளியிடும் நிகழ்விலும் இவர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# போக்குவரத்து அமைச்சராக திலும் அமுனுகம நியமனம்

## இன்று பதவிப்பிரமாணம்

கொழும்பு, மார்ச் 04

அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அமைவாக போக்குவரத்து அமைச்சராக திலும் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் சிலர் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டிருந்த நிலையில், திலும் அமுனுகம இன்று பெரும்பாலும் பதவிப்பிரமாணம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனிப்பட்ட பயணமாக நுவரெலியா சென்றுள்ளதன் காரணமாக நேற்று அவர் பதவிப்பிரமாணம் செய்யவில்லை என்பது குறிப்பிட்டத்தக்கது.

திலும் அமுனுகம தற்போது வாகன ஒழுங்குறுத்துகை, பஸ் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சராக செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பதவி நீக்கிய....

முகநூல் பதிவொன்றின் ஊடாக அவர் தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் கடந்த காலங்களில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்து வந்த நிலையில், ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி நேற்று குறித்த இருவரையும் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கியிருந்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையை மேற்கோள்காட்டி முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச “நன்றி!” என்று பதிவிட்டுள்ளார். (அ)

## விமலின் கதிரை....

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் அவர் நேற்று மாலை பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னதாக கைத்தொழில் அமைச்சராக விமல் வீரவன்ஸ செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அனைத்து...

கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண ஆகியோர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட்டை நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்தனர்.

இதன்போது அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப் பொன்றை உருவாக்கினால் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தூதுக்குழுவிடம் கூறினார் என நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இலங்கை எடுத்துள்ள முயற்சி சிறந்தது என்ற போதிலும் மேலும் பல மாற்றங்கள் அவசியம் என மிச்செல் பச்சலெட் வலியுறுத்தினார் என அலி சப்ரி கூறினார்.

இந்த நிலையில், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் தொடர்பில் தாம் மனித உரிமை ஆணையாளரை தெளிவுபடுத்தியதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்போது, யுத்த குற்றங்கள் இலங்கையில் இடம்பெறவில்லை என்பதனை மனித உரிமை ஆணையாளருக்கு தெளிவுபடுத்தியதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

## கோப்பாய் கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் விபத்தில் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 04

கோப்பாயில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் கிருஷ்ணன் கோவில் சந்தியில் நேற்று இரவு 7 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் கனகசபை பாஸ்கரன் என்பவரே உயரிழந்தார்.

கரவெட்டியில் உள்ள வீட்டிலிருந்து இரவு மோட்டார் சைக்கிளில் கல்வியியல் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தபோது வீதியில் வெளிச்சம் இன்றி நிறுத்தப்பட்டிருந்த உழவு இயந்திர பெட்டியுடன் மோதி விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (அ-03)

## மின் தடைக்கு....

யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியில் நல்லூர் செம்மணி வளைவுப் பகுதியில் நேற்று இரவு 8.30 மணியளவில் ஒன்றுகூடியவர்களால் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது நாட்டில் பரவலாக பல மணிநேர மின்சாரத் தடை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நிலையில் மக்களின் பாதிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சுகிர்தன், சயந்தன், யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன், உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-03)

## இலங்கையிலிருந்து...

இந்த சந்திப்பின்போது, இலங்கையில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்கள் நாட்டின் உண்மை நிலையை பிரதிபலிக்காத காரணத்தால், அவற்றை மீள்பரிசீலனை செய்யுமாறு அமைச்சர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்து நாட்டின் வளர்ச்சியை நேரில் பார்க்குமாறும் ஆணையாளர் பச்லெட்டுக்கு அமைச்சர் பீரிஸ் அழைப்பு விடுத்தார்.

யுத்தம் முடிந்து 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நேரடியாக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் பலனில்லை என வலியுறுத்திய வெளிவிவகார அமைச்சர், ஐக்கிய நாடுகளின் இராஜதந்திரிகள் இலங்கையின் நிலைமை குறித்து அந்நாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்மானங்களை எடுப்பார்கள் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பின்போது நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் உடனிருந்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# போர் ஆக்கிரமிப்பை விட பயங்கர நிலையில் நாடு!

## சாடுகின்றார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, மார்ச் 04

போர் ஆக்கிரமிப்பை விட மிக பயங்கரமான நிலைமைக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மூன்று பிள்ளைகளுக்கு சாப்பிட கொடுக்க முடியாத தற்கொலை செய்துகொண்ட தந்தையை தற்போது தேசிய தந்தையாக மாற்றி, மேலும் இப்படியான தந்தைகள் உருவாவதை தடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

அனைவரும் கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நாடு வங்குரோத்து அடைந்து விட்டது என்ற கவலையான செய்தியை நாட்டுக்கு கூறவேண்டியுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு என்ற பிரச்னை குறுகிய காலத்துக்குள் தீர்க்கப்படமாட்டாது.

மின்சாரம் துண்டிக்கப்படுவது மார்ச் மாத இறுதியில் மிக மோசமாக அதிகரிக்கும். உணவு பொருட்களின் விலைகள் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகரிக்கும். அதேபோல் தொழில் இழப்பு மற்றும் பண மதிப்பிழப்பு என்பன பயங்கரமான நிலைமையாக மாறும்.

இதனால், பழைய கொள்கைகளை கைவிடவேண்டும். சமவுடமை போன்ற கொள்கைகள் இனி மேல் எடுப்படாது. கியூபாவின் கொள்கையும் தற்காலத்துக்கு பொருந்தாது. கியூபா ஊழலற்ற சிறந்த நாடு, எனினும் பொருளதார ரீதியில் வளர்ச்சியடைந்த நாடு அல்ல. மக்கள் அரசியல்வாதிகளை விமர்சித்துக்கொண்டிருப்பதில் பயனில்லை.

மக்கள் தமது அரசியலை காட்டுவதற்கான காலம் வந்துள்ளது. அரசியலை அரசியல் கட்சிகளிடம் வழங்கிவிட்டு அமைதியாக இருக்க வேண்டாம். உங்களது கடமையை செய்யுங்கள். பிள்ளைகளுக்கு சாப்பிட கொடுக்க முடியாமல் தற்கொலை செய்துக்கொண்ட தந்தை. அவர் தான் தற்போது தேசிய தந்தை. நானும் பிள்ளைகள் இருக்கும் தந்தை. இதே நிலைமை உங்களுக்கும் ஏற்பட இடமளிக்கா தீர்கள். தற்கொலை இதற்கு தீர்வல்ல. எமது பணத்தை கொள்ளையிட்டவர்களுக்கு எதிராக களத்தில் இறங்கிப் போராடுவோம்.

அரசியல்வாதிகளைத் திட்டி, சாபமிட்டு, இந்த பிரச்னைகளை தீர்க்க முடியாது. உங்களது பிள்ளைகளுக்காக முன் நோக்கி வாருங்கள். ஒரு கொடியின் கீழ் பலமாக இணையுங்கள். போர் ஆக்கிர மிப்பை விட பயங்கரமான நிலைமைக்குள் நாடு விழுந்துள்ளது.

அச்சுறுத்தல், அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் வெளியில் வாருங்கள். முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கும் வீடுகளில் மின்சாரம் இல்லை,சாப்பிட உணவு இல்லை, எரிபொருள் இல்லை, மருந்துகள் இல்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

அனைவரும் தமது வாழும் உரிமைக்காக தற்போது குரல் கொடுக்க வேண்டும்-என்றார். (அ)



# பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக வாழைச்சேனையில் கையெழுத்து

மட்டக்களப்பு, மார்ச் 04

இலங்கைத் தமிழ் அர சுக்கட்சி வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் பயங் கரவாதத் தடைச்சட்டத் துக்கு எதிரான கையெ ழுத்துப் போராட் டம் நேற்று வாழைச்சேனைப் பிரதேசத்தில் இடம்பெற் றது.

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வாலிபர் முன்னணியின் தலைவ ரும், வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பின ருமாகிய கி.சேயோன் ஒழுங்கமைப்பில் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் க.நல்லரெட்ணம் தலைமையில் வாழைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தின் முன்பாக இந்த போராட்டம் இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்கள், வாலிபர் முன்னணி உறுப்பினர்கள் கலந்துகொண்டு பொது மக்களிடம் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

இதன்போது கோறளைப்பற்று பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் பலர் கலந்து கொண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக கையொப்பமிட்டனர். (அ)

# கடனட்டைகளுக்கும் நாட்டில் தட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 04

வங்கிகளினால் வழங் கப்படும் கடனட்டைகள் மற்றும் வரவட்டைகள் என்பவற்றுக்கு தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அட்டைகளை தயாரிப்பதற்கு பயன் படுத்தப்படும் மைக்ரோ சிப்புக்கு உலகம் முழுவதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அதனை இறக்குமதி செய்யும் லேக்ஹவுஸ் டெக்னோலஜிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டோனி ஜோன் புள்ளே தெரிவித்தார்.

அத்துடன், டொலர் தட்டுப்பாடும் அதனை இறக்குமதி செய்வதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலை காரணமாக புதிய கடனட்டைகள் முற்கொடுப்பனவு அட்டைகள் மற்றும் காலாவதியான அட்டைகளுக்கான புதிய அட்டை என்பவற்றை பெற்றுக் கொள்வதில் மக்கள் பிரச்னையை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த ஆண்டு இறுதி வரையில் நாட்டில் **2,171,348** கடனட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் **17,696,356** வரவட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. (அ)

# மின் துண்டிப்பு, வாழ்க்கைச் சுமை அதிகரிப்புக்கு எதிராக போராட்டம்!



கொழும்பு, மார்ச் 04

எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, மின்சாரம் துண்டிப்பு மற்றும் வாழ்க்கைச்சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஹற்றன், கினிகத்தேனை நகரில் நேற்று வியா ழக்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜே.வி.பியினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் அந்தக் கட்சியின் அமைப்பாளர்கள், ஏற்பாட்டாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், தடையின்றி மின்சாரம் வழங்கப்படவேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியதுடன், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசே பொறுப்பு கூற வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

“ஏழரை மணிநேர மின்சாரம் துண்டிப்பால் சிறு முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழில் நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன. இதற்கிடையில் எரிபொருளும் இல்லை. அதனால் சாரதிகள் உட்பட பல துறையினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே நாட்டில் பல பிரச்னைகள் உள்ள நிலையில், இப்படியான பிரச்னைகளால் மக்கள் மீண்டெழ முடியாதுள்ளது.” எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

# நீண்ட வரிசையில் வாகன சாரதிகள் இரவில் மாத்திரம் டீசல் விநியோகம்

திருமலை, மார்ச் 04

திருகோணமலையில் டீசல் மற்றும் பெற்றோ லுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதால் சாரதிகள் நீண்ட நேரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசை யில் காத்திருந்து கொள்வனவு செய்வதால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி யுள்ளனர்.

அத்துடன் இரவில் மாத்திரம் டீசல் விநியோகிக்கப் படுவதால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் வாகனச் சாரதிகள் கூறியுள்ளனர்.

திருகோண மலை நகரில் ஒருசில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் விநியோகம் செய்யப்படுவதுடன் அவ்வாறு விநியோகிக்கப்படும் எரிபொருள் நிலையங்களில் கட்டுப் பாடுகளுடன் குறிப்பிட்ட பணத்துக்கு மேல் பெற்றோல் விநியோகிக்கப்படுவதில்லை எனவும் கூறப்படுகின்றது.

திருகோணமலை நகர், நிலாவெளி, சீனக்குடா மற்றும் கந்தளாய் போன்ற பிரதேசங்களில் டீசலுக்கு தட்டுப்பாடு நிலவி வருவது டன், தனியார் மற்றும் வரையறுக்கப் பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் நீண்ட தூரம்வரை வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

அத்துடன், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரவு வேளைகளில் மாத்திரம் டீசல் விநியோகம் செய்யப்படு வதையும் அவதானிக்க முடிந்தது.

அவ்வாறு காத்திருந்து வாகனம் ஒன்றுக்கு **2000** ரூபா முதல் **3500** ரூபா வரை மாத்திரம் சில எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படுவ தாகவும் இவ்வாறு வழங்கப்படும் எரிபொருள் குறிப்பிட்ட தூரம் மாத்திரமே பயணிக்கப் போதுமாக இருப்பதாகவும் இது தமக்கு பெரும் தலையிடியை கொடுப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர். (அ)









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஒரு நல்ல நாள் பாத்து சொல்லுறன், உத்தமவில்லன் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - பெண் வாழ்வாதாரம்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்களும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்